பக்கங்கள்:07

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 11 திங்கட்கிழமை 24.04.2023 கதிர்165

## நெடுந்தீவு முன்னாள் தவிசாளர் காணி மோசடி வழக்கில் கைது

(ந.லோகதயாளன்).

மோசடியான வகையில் காணி உரிமை மாற்றம் செய்த குற்றச்சாட்டில் நெடுந்தீவுப்

பிரதேசசபையின் முன்னாள் தவிசாளரான ஈபிடிபி கட்சி உறுப்பினர்

ஞாயிற்றுக்கிழமை பொலிசாரால் கைது செய்யப்பட்டார்.

தீவகத்தில் முறையற்ற வகையில் பரம்பரைக் காணியை மோசடியான முறையில் தனதுபெயருக்குஉரிமம்மாற்றிய குற்றச்சாட்டில் நெடுந்தீவு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் நல்லதம்பி சசிகரனே கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரது மோசடிக்குத் துணை நின்றனர் என்ற குற்றச்சாட்டில் முன்னாள் கோட்டக்கல்வி பணிப்பாளர் உள்பட மேலும் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

12 சகோதரங்கள் இடையே பிரிவிடல் செய்யப்பட்டவேண்டிய ஆதனத்தை ஒரு சகோதரர்

மட்டும்முறையற்றவகையில் தனது பெயருக்கு மாற்றிப் பின்பு விற்பனை செய்தார் என்ற குற்றச்சாட்டில் நெடுந்தீவு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளரைக் கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

நெடுந்தீவு 3 ஆம் வட்டாரத்தில் உள்ள ஆதனம் ஒன்று தொடர்பிலேயே இந்தக் கைது இடம்பெற்றுள்ளது. தமது பங்குக்கும் உரிய காணியைச் சகோதரர் சட்டத்துக்குப்புறம்பாகத் தனது பெயருக்கு மாற்றியுள்ளார் என்று வெளிநாட்டில் வசிக்கும் சகோதரர் யாழ்ப்பாணம்பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் சிறப்பு குற்ற விசாரணைப் பிரிவில் ☞2

## தீவிர பரப்புரைகளை ஆரம்பித்தது பெரமுன

### நாமல் தலைமையில் தொடர் மக்கள் சந்திப்புக்கள்

பொது ஜன பெரமுன கடந்த சனிக்கிழமை நடைபெற்ற வருடாந்தப் பொதுக் கூட்டத்தினை அடுத்து தீவிரமான பரப்புரைகளை அன்றிலிருந்தே ஆரம்பித்துள்ளதாக கட்சித்தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறித்த தினம் கொலன்னாவ, கோட்டே, உள்ளிட்ட பகுதிகளில் மக்கள் சந்திப்புக்கள் முன்னெடுக்கப்பட்டன. இந்தச் சந்திப்புக்களில் நாமல்

ராஜபக் ஷவையே பிரதானப்படுத்தப்பட்டு ஏற்பாடுகள் முன்னெடுக்கப் பட்டிருந்தன.

இந்நிலையில் ஞாயிற்றுக்கிழமை மாத்தளையில் முன்னாள் அமைச்சர் ஜனக்க பண்டார தென்னக்கோனின் தலைமையில் மக்கள் சந்திப்புக்கள் இடம்பெற்றன.

இதன்போதும், அதிதியாக நாமல் ராஜபக் ஷவே அழைக்கப்பட்டு விசேட

உரையாற்றியிருந்தார். அவரை பிரதானப் ☞2

## இது ரகசியம் அல்ல!

கடந்த வாரம் ஜனாதிபதி ரணிலும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவும் இரகசியமாகச் சந்தித்துப் பேசினார்கள் என்று செய்திகள் வெளியாகி இருந்தன.

ஆனால் என்ன பேசிக் கொண்டார்கள் என்று உடனடியாகத் தெரியவரவில்லை. தமிழ் சிங்களப் புத்தாண்டுக்கு முன்னரே இந்தச் சந்திப்புக்கு நேரம் ஒதுக்கும்படி ரணிலிடம் மகிந்த கேட்டிருந்தார். அவரே நேரடியாக ரணிலுக்கு அழைப்பெடுத்து சந்திப்புக்கு நேரம் கேட்டார். அப்போது ரணில் நுவரெலியாவில் இருந்தார். கொழும்பு திருப்பியதும் சந்திக்கலாம் என்று அவர் தெரிவித்திருந்தார்.

அதன்படியே ரணில் கொழும்பு திரும்பியதும் இரு தலைவர்களும் நேரில் சந்தித்துப் பேசினர். அவர்கள் இருவரும் தனியாகவே சந்தித்துப் பேசினர் என்பதால் என்ன விடயங்கள் பற்றி இருவரும் கலந்துரையாடினர் என்று ☞2

## தேசிய ஆட்சியால் ஒரு பிரச்சினையும் தீர்ந்ததேயில்லை

தேசிய ஆட்சியினால் எந்தவொரு தேசியப் பிரச்சினையும் தீர்க்கப்பட்டதில்லை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாநகர சபை முதல்வர் வேட்பாளர் சட்டத்தரணி முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

கொழும்பில் ஞாயிற்றுக்கிழமை செய்தியாளர்களிடம் பேசினார் அவர். அங்கு அவர்மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை உள்ளது. அதனால்அவரால்கொண்டுவரப்படும்அனைத்து யோசனைகளையும் நிறைவேற்றுவதற்கான சக்தியும் உள்ளது. அப்படியிருக்கும்போது எதற்கு தேசிய ஆட்சியை உருவாக்கவேண்டும்? அதற்கான தேவைப்பாடு என்ன. என்பதுதான் இங்குள்ள ☞2

## நாமலின் நகைச்சுவை

அநுரகுமாரவின் பொய்யான கருத்தால் நான் எனது புதல்வனிடத்தில் சிக்கப்போகின்றேன் என்று நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளர்.

மாத்தளையில் ஞாயிறன்று நடைபெற்ற மக்கள் சந்திப்பில் உரையாற்றிய அவர் இதனைத் தெரவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அநுரகுமாரதிஸாநாயக்க என்னிடத்தில் 19 லம்போகினி அதி சொகுசு கார்கள் இருப்பதாகக் கூறினார். அதன்பின்னர், என்னிடத்தில் தங்கங்கள் நிறைந்த பெட்கம் இருப்பதாகக் கூறினார்.

அவர் கூறிய பின்னர் நானே அந்த விடயங்கள் எங்கே இருக்கின்றன என்று இன்னமும் தேடிக்கொண்டிருக்கின்றேன். இந்த நிலையில் எனது புதல்வர் இன்னும் சிறிது காலத்தில் சமூக வலைத்தளங்களில் சென்றுபார்வையிடும்போது, தப்பித்தவறி, அநுரகுமார கூறிய கருத்துக்களை அவர் பார்த்தான் என்றால்,

தந்தையே ☞2

# நாளைய போராட்டத்தை வெற்றியீட்ட வைப்பது அனைவரினதும் கடமை

### தமிழ்த் தேசியக் கட்சித் தலைவர் அறிக்கை

நாளை செவ்வாய்க்கிழமை வடக்கு, கிழக்கு மாகாணங்களில் முன்னெடுக்கப்படவுள்ளகடைஅடைப்பைமுழுவெற்றியீட்ட வைப்பது எமது மக்கள் உயரிய கடமை என்று தெரிவித்துள்ளார் தமிழ் தேசியக் கட்சியின் தலைவர் சட்டத்தரணி எஸ்.சிறீகாந்தா. இது தொடர்பில் அவர் ஞாயிறு இரவு விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இந்தஹர்த்தால்இரண்டுமுக்கியமான விடயங்களை மையப்படுத்தி

முன்னேடுக்கப்படுகின்றது. ஒன்று பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலம் என்ற இந்த ஆட்சியின் அராஜக திட்டத்தை தோற்கடிப்பது. மற்றயது தமிழ் மக்களின் மரபுவழி தாயகமான வடக்கு கிழக்கு மாகாணங்களில் எமது வரலாற்றுப் பாரம்பரியத்தையும், தொன்மையையும் சிதைக்கும் நோக்கத்துடன் ஆலயங்கள் மீது தொடுக்கப்படும் தாக்குதல் நடவடிக்கைகளை தடுத்து நிறுத்துவது என்பதாகும்.

இந்த இரண்டு ஆபத்துக்களையும் எதிர்த்து தோற்கடிப்பதைத் தவிர ☞2

## 13 பரிந்துரைகள்

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்காக 13 பரிந்துரைகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும், நீதி அமைச்சர் விஜயதாச ஆகியோரிடத்தில் கையளித்துள்ளதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

அக்கட்சியின் பொதுச்செயலாளரும், அமைச்சருமான ஜீவன் தொண்டமான் செய்தியாளர்களிடம்ஞாயிற்றுக்கிழமை இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது: புதிய பயங்கரவாத எதிர்ப்பச் சட்டம் சம்பந்தமாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கவனத்தில் எடுத்துக்கொண்டது. அதற்கு அமைவாக, அந்தச் சட்டமூலத்தில் காணப்பட்ட விடங்களில் எமது கட்சியினருக்கு முரண்பாடாக காணப்பட்ட 13விடயங்களை திருத்துமாறு பரிந்துரைகளை தயாரித்துஜனாதிபதிரணில்விக்கிரமசிங்கமற்றும் அமைச்சர் விஜயதாச ஆகியோரிடத்தில் ☞2

## நாளைய போராட்டத்துக்கு ஈரோஸ் கட்சியும் ஆதரவு

(பழுவூரான்)

ஜனநாயகத்தைப் படுகொலை செய்யும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தைநீக்கக்கோரிவடக்கு கிழக்கு மாகாணங்களில் நாளை செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ள முழு அடைப்புப் போராட்டத்திற்கு ஈரோஸ் ஜனநாயக முன்னணியும் தமது முழுமையான ஆதரவை வழங்கவுள்ளதாககட்சியின் செயலாளர் இரா.ஜீவன்

இராஜேந்திரன்வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவ்வூடக அறிக்கையில் மேலும்தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

நாட்டு மக்களையும், மாற்று அரசியல் சிந்தனையாளர்களையும், சமூக அரசியல்

செயற்பாட்டாளர்களையும் அடக்கி ஒடுக்கிவிட்டு நாட்டுக்குள் காட்டாட்சியை

அமைக்கும் செயற்பாடாகவே இச்சட்டம் அரங்கேறவுள்ளது. ☞2

## இலங்கையில் அரசியல்வாதிகள் சொல்வதொன்று செய்வதொன்று

### தென்கொரிய அதிகாரி விளாசல்

இலங்கையில் அரசியல்வாதிகள் சொல்வதொன்று செய்வதொன்று என்று சாடியுள்ளார்.

தென்கொரியாவின் பேரிடர் நிவாரண நிலையத்தின் தலைவர் ஜோ சுங் லீ.

இப்படியிருந்தால் இலங்கையால் முதலீடுகளைக் கவர முடியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் உள்ள காட்சி ஊடகமொன்றுக்கு வழங்கிய தனிப்பட்டசெவ்வியில் அவர்

இதனைத் தெரிவித்தார். அவர்மேலும்தெரிவித்ததாவது: இலங்கையில் பல்வேறு தொழில் முயற்சிகளை முன்னெடுக்க முடியும்.

ஆட்சியாளர்களுடன் இணைந்து முன்னெடுக்கும் தொழில் முயற்சிகள் உள்ளன. அதனை விடவும் தனியார் துறையினருடன் இணைந்து பங்குதாரர்களாக முன்னெடுக்கும் தொழில் முயற்சிகளும் உள்ளன.

முன்னெடுக்கப்படும் எவ்விதமான தொழில் முயற்சிகளும் இலங்கையின் பொருளாதாரத்தில் செல்வாக்குச் செலுத்தும் என்பதை என்னால் உறுதியாகக் கூறமுடியும்.

இந்த விடயங்களை எடுத்துக்கூறி ☞2

## பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தில் திருத்தங்கள் செய்தால் ஏற்போம்

### விமல் வீரவன்ஸ தெரிவிப்பு

நாட்டுக்கு பயங்கரவாத தடைச்சட்டம் தேவை என்பதற்காக நிறைவேற்று அதிகாரத்தை வலுப்படுத்தி மக்களைஅடக்குமுறைக்குள் கொண்டு செல்ல முடியாது. தற்போதைய சட்டமூலத்தில் சில திருத்தங்களைச் செய்து நிளைவேற்றலாம் என்று தேசியசுதந்திரமுன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்லவில் உள்ள அவரது கட்சியின் அலுவலகத்தில் செய்தியாளர்களை ஞாயிற்றுக்கிழமை சந்தித்தபோதுஅவர்இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டுக்கு பயங்கரவத எதிர்ப்புச் சட்டம் அவசியம் என்பதில்எமக்குஎந்தவிமான மாறுபட்ட கருத்துமில்லை. அந்தச் சட்டம் சர்வதேச தரங்களுக்கு

அமைவாக இருக்கவேண்டும் ☞2

## தேர்தல்களை நடத்துவதற்கு மொட்டு கட்சி வலியுறுத்து

ஊள்ளூராட்சி மற்றும், மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்துவதை

வலியுறுத்துவதற்கு கட்சி என்ற வகையில் முன்னிற்பதாக பொது ஜன பெரமுனவின் பொதுச் செயலாஜூளர்சகரகாரியவசம் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா பொது ஜனபெரமுனவின்மாத்தளை மாவட்டக்கூட்டம் சனிக்கிழமை அமைச்சர் ஜனக்க பண்டார தென்னக்கோனின் இல்லத்தில் நடைபெற்றது. அங்கு உரையாற்றுகையில் கட்சியின் பொதுச் செயலர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும்

தெரிவித்ததாவது: உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை திகதி குறிப்பிடாது பிற்போட்டுள்ளார்கள். மாகாண சபைகளுக்கான தேர்தல் நடத்தப்படுவதும் தடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிலைமைகளை நாம்முற்றாகஎதிர்க்கின்றோம். கட்சிஎன்றவகையில்குறித்த இரு தேர்தல்களையும் முன்னெடுப்பதற்கு நாம் தொடர்ச்சியாக வலியுறுத்தல்களைச் செய்து வருகின்றோம்.

எதிர்வரும் காலங்களில் ஜனாதிபதித் தேர்தலோ அல்லது நாடாளுமன்றத் தேர்தலோ

நடத்தப் படலாம் என்று கூறப்படுகின்றது. எந்தத் தேர்தல் ☞2

## எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் பேரிடர் வழக்கு இங்கே நடக்கவேண்டும்

### வலியுறுத்துகிறது சுற்றால் நீதிக்கான நிலையம்

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலினால் ஏற்பட்ட பேரிடர் தொடர்பிலான வழக்கினை

இலங்கையிலேயே நடத்த வேண்டும் என்று குறிப்பிட்டசுற்றாடல்நீதிக்கான நிலையத்தில் தலைவர் சட்டத்தரணி கலாநிதி. ரவீந்தரநாத் தாபரே, 6.2 பில்லியன் டொலர்களுக்கு அதிகமாக இழப்பீட்டைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் சுட்டிக்காட்டினார்.

எக்பிரஸ் பேர்ள் கப்பலினால் ஏற்பட்ட பேரிடர் தொடர்பான வழக்கு நாளை

சிங்கப்பூரில் ஆரம்பிக்கப்படவுள்ளமை தொடர்பில் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

எக்பிரஸ் பேர்ள் கப்பலினால் ஏற்பட்ட பேரிடர் இலங்கைக் கடல் எல்லைக்குள்ளேயே நடைபெற்றுள்ளது. அது சர்வதேசகடல்எல்லைக்குள்ளோ அல்லதுஅதற்கு அண்மையிலோ நடைபெற்றிருக்கவில்லை. ☞2

## தேசிய ஆட்சிக்கான அழைப்பு செவ்வாய்க்கிழமை வெளிவரும்

### லக் ஷ்மன் கிரியெல்ல தெரிவிப்பு

தேசிய ஆட்சியொன்றை அமைப்பதற்கான அழைப்பு நாளை செவ்வாய்க்கிழமை

விடுக்கப்படவுள்ளதாக எமக்குத் தகவல் கிடைத்துள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக் ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

கண்டியில்உள்ளஅவரது இல்லத்தில்ஞாயிற்றுக்கிழமை செய்தியாளர்களிடம் அவர் இதனைத்தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேசிய ☞2

## அரக்கத்தனமான சட்டம் முழு நாடுமே அழியும்

### புதிய பயங்கரவாதத் சட்டம் குறித்து ஜே.வி.பி.

புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமானது அரக்கத்தனமானது என்று ஜேவிபியின் தேசிய மக்கள் சக்தியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் இராமலிங்கம் சந்திரசேகரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில்ஞாயிற்றுக்கிழமை செய்தியாளர்களிடம் அவர் இதனைக்

தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது: புதிய பயங்கரவாதச் சட்டமானது, மக்களை அடக்குகின்ற அரக்கத்தனமான சட்டம்.

அதேபோன்று மக்களின் கருத்தச் சுதந்திரத்தினைபறிக்கின்றனகாவாலித்தனமான சட்டம்.

மக்களுடைய நலனுக்காகவோ அல்லது நாட்டினுடையநலனுக்காகவோஇந்தச் சட்டம்கொண்டு வரப்படவில்லை என்பதை முழு நாடுமே அறியும்.

இந்தச் சட்டத்தினை கொண்டுவருபவர்கள், மக்களால் முழுமையாக அடித்து

விரட்டப்பட்ட, மக்கள் ஆணையற்றவர்களாக உள்ளார்கள். ஆகவே அவ்விதமானவர்கள்

கொண்டுவரும் சட்டமானது நிச்சமாக மக்களை வாயிருந்தும் மௌனிகளாக்கும்நோக்கத்தினைக் கொண்டதாகும். காதிருந்தும் ☞2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அச்சொட்டாகத்தெரியவரவில்லை என்றாலும் அவர்கள் தமது சகாக்களிடம் பகிர்ந்துகொண்டவற்றில் இருந்து, பிரதமர் பதவியை மகிந்த தனக்கு வழங்குமாறு ரணிலிடம் வலியுறுத்தியிருக்கிறார் என்றும் பதிலாக அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் பொது ஜன பெரமுனவின் சார்பில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கானவாய்ப்பு ரணிலுக்கு வழங்கப்படும் என்று மகிந்தஉறுதிமொழி வழங்கினார் என்றும் கூறப்படுகின்றது. இதற்கு ரணிலின் பபிரதிபலிப்பு என்ன என்பது உடடினயாகத் தெரியவரவில்லை. ஆனால், பிரதமரர் பதவியை மீளப் பெறுவதில் மகிந்த திடமாக இருக்கிறார். அதுவும் மே மாதம் 7ஆம் நாளுக்குப் பின்னர் மகிந்தவுக்கு நல்ல காலம் என்று அவரது ஜோசியர்கள் திட்டவட்டமாகக் கூறிவிட்டதால் மீண்டும் அதிகாரத்தைக் கைப்பற்றுவதில் மகிந்த தீவிரமாக இருக்கிறார். அவர் மீண்டும் அதிகாரத்திற்குவந்து மொட்டுக்கட்சியின் ஆட்சியை அமைக்கவில்லையாயின் கட்சியின் கட்டுக்கோப்பைப் பேணிப் பாதுகாக்க முடியாது என்றும் கட்சியில்

உள்ள பலரும் ரணிலுக்குப்பின்னால் ஓடிவிடுவார்கள் என்றும் பல மூத்த கட்சி உறுப்பினர்கள் மகிந்தவிடம் வலியுறுத்தியிருந்தனர்.

மகிந்தவைப் பிரதமராகுவது மட்டும் அவர்களின் நோக்கமல்ல. மொட்டு கட்சியின் ஆட்சியைக் கைப்பற்றுவதும் அவர்களின் விருப்பம். தற்போது அரசியல் நிலைமைகள் முன்புபோல பொது ஜன பெரமுன கட்சிக்கு எதிராக இல்லை என்பதால் ஆட்சியை மீண்டும் கைப்பற்றிக்கொண்டு தமது ஆட்சி அமைக்கப்படவேண்டும் என்று அவர்கள் விரும்புகின்றார்கள். கடந்த பல மாதங்களாகவே அவர்கள் தமது விருப்பத்தை மகிந்தவிடம் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றார்கள்.

மகிந்தவும் அதற்குச் சம்மதம் தெரிவித்திருந்தார். ஜோசியர்கள் மே 7 கடந்ததும் மகிந்தவுக்கு மீண்டும் நல்ல காலம் பிறக்கிறது என்று சொன்னதால், பிரதமர் பதவியை மீண்டும் பெறுவதற்கான நடவடிக்கைகளை அப்போதே தொடங்க மகிந்த தயாராக இருந்தார்.

ஆனால், அவரது மகனும் அரசியல் வாரிசுமான நாமல் ராஜபக்ச வேறு திட்டம் வைத்திருந்தார். சஜித் பிரேமதாசவையும் ஆளும் தரப்புப் பக்கம் இழுத்துவிட்டு பொது ஜன பெரமுனவை எதிர்க் கட்சி வரிசையில் அமர வைப்பது அவரது நோக்கம். நாமலை எதிர்க் கட்சித் தலைவராக்கவேண்டும் என்றும் கட்சிக்குள் கொஞ்சப் பேர் ஆதரவு தெரிவிக்கின்றனர். அவர்கள் திட்டமிட்டபடி ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து எவரும் அரசுப் பக்கம் வரவில்லை. சஜித்தும் பிரதமர்பதவியைப்பெறுவதில் ஆர்வம் காட்டவில்லை. இதனால் நாமலின் திட்டம் பிசுபிசுத்துப் போனது. நாமலின் திட்டம் சரிவராது எனக் கண்ட மகிந்தர் தனது பிரதமர் திட்டத்தை மீண்டும் தீவிரமாக முன்னெடுக்கத் தொடங்கியிருக்கிறார். அதற்காகவே அவர் ரணில் விக்கிரமசிங்கவுடனும் நேரடியாகப் பேசியுள்ளார்.

**இடிமின்னல்**

## நெடுந்தீவு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முறைப்பாடு செய்துள்ளார்.

அதனடிப்படையில் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், மோசடியாக ஆதனத்தை உரிமை மாற்றம் செய்தவரான நல்லதம்பி சசிகரனைக் கைது செய்தனர்.

அவரது மோசடியாக முடிக்கப்பட்ட உறுதிக்குசாட்சிக் கையொப்பமிட்ட முன்னாள்

கோட்டக்கல்விப் பணிப்பாளரும் மற்றொருவரும் என மேலும் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் மூவரும் இன்று ஊர்காவற்றுறை நீதிவான் மன்றில் முற்படுத்தப்படவுள்ளனர்.

## தீவிர .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படுத்தியே கலந்துரையாடல்களும்தொகுதிக் கட்டமைப்புக்களும் நடைபெற்றுள்ளன.

புத்தாண்டின் பின்னர் பொதுஜனபெரமுன மீண்டும் அதிகாரத்தினை கைப்பற்றும் நோக்குடன் நகர்வுகளை நாமல் ராஜபக் ஷவை மையப்படுத்தி தொடங்கியுள்ளதாக தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## நாளைய ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்களின் அடிப்படை உரிமைகளை மறுத்து, மக் கள் மீது கட்டவிழ்த்து விடப்படுகின்ற அரச ஒடுக்குமுறைகளுக்கு எதிராகக் குரல்கொடுக்காதவாறு இருக்கும் சட்டத்தை, இன்னும் பயங்கரமாக்கி பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் என்ற பெயரில் கொண்டு வரும் அதிகாரவர்க்கத்தின் சூழ்ச்சிகளை முறியடிக்கநாட்டு மக்களும், ஜனநாயகத்தை மதிக்கின்றசகலசமூக,அரசியல் சக்திகளும் கைகோர்த்துக் கொள்ளவேண்டும். அந்த வகையில் நாளைய தினம் வடக்கு கிழக்கு மாகாணங்களில் அழைப்பு விடுக்கப்பட்டுள்ள முழு அடைப்புப் போராட்டத்திற்கு ஈரோஸ்ஜனநாயகமுன்னணி முழுமையான ஆதரவை வழங்கும்.

ஒருகாலத்தில் தமிழ் மக்களையும், முற்போக்கு அரசியல் செயற்பாட்டாளர்களையும் இலக்கு வைத்து உருவாக்கப்பட்ட பயங்கரவாதச் சட்டம் அன்மைக் காலங்களாக சிங்கள மக்களையும் இளைஞர்களையும்இலக்குவைத்தபோது அதன் பயங்கரத்தை உணர்ந்தவர்களாக புதிதாக கொண்டுவரப்படவுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்திற்கு எதிராக இன்று கிளர்ந்தெழுந்துள்ளார்கள். முழு நாட்டு மக்களும் இச்சட்டத்தின் காட்டுமிராண்டித்தனத்தை உணர்ந்தவர்களாக இருக்கின்றனர். இச்சட்டம் நிறைவேற்றப்படுமானால், மக்கள் சுதந்திரமாக மூச்சு விடுவதற்கான உரிமைகூட பறிக்கப்படலாம்.

ஆட்சியாளர்களின் அடாவடித்தனத்திற்கெதிராக குரல்கொடுக்கமுடியாமல் போகலாம். உலக நாடுகளில் நமதுநாடுஅந்நியப்பட்டுக்கூடப் போகலாம். ஆகவே இந்தச்

சட்டமூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் போது மக்கள் பிரதிநிதிகள் மக்களுடைய கருத்துக்களுக்கு மதிப்பளித்து நடந்துக் கொள்ளவேண்டும். அதன் மூலமாகவே ஜனநாயகத்தை அழியாது பாதுகாக்க முடியும் -எனவும் அந்த அறிக்கையில் மேலும்தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தேர்தல்களை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடத்தப்பட்டாலும்

நாம் அந்தத் தேர்தலை முகங்கொடுப்பதற்கு தயராகவே உள்ளோம். அதற்காக கிராமமட்டங்களில் தொடர்ச்சியாக மக்கள் குழுக்களை கட்டியெழுப்ப வேண்டும் - என்றார்.

## நாமலின் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லம்போகனி வாகனமும், தங்கப் பெட்டகமும் எங்கே என்று கேட்டால் என்னுடைய நிலைமையை யோசித்துப் பாருங்கள்.

அநுரகுமாரவால் நான் என் புதல்வனிடத்தில் சிக்கப் போகின்றேன் - என்றார்.

## எக்ஸ்பிரஸ் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆகவேகுறித்தவிடயத்தினை

இலங்கைக்குள்ளே கையாள்வதே பொருத்தமானது.

மேலும், குறித்த கப்பல் பேரிடர் மற்றும் அதற்கான இழப்பீடுகளைக் கோருதல் உள்ளிட்ட விடயங்களை கையாள்வதற்கான சட்ட ஏற்பாடுகள் இலங்கையினுள் போதுமான அளவில் காணப்படுகின்றன. ஆகவே அந்தப் பேரிடரிற்கான வழங்கினை இலங்கைக்கு வெளியில் கொண்டு செல்வதற்கான காரணம் என்ன?

அதேநேரம், சிங்கப்பூரில் இந்தவழக்கினைமுன்னெடுப்பதற்கு யார் அனுமதி

அளித்தது. அதற்கான நிதியினை ஒதுக்கீடு செய்தது யார்? இந்த வழக்கினை இறுதி செய்யும் வரையில் இலங்கை ஆட்சியாளர்கள் செலவிடுவதற்குத் திட்டமிட்டுள்ள நிதியின் அளவு எவ்வளவு? அந்தநிதிஎவ்வாறு பெற்றுக்கொள்ளப்படுவுள்ளது

என்பது தொடர்பிலான தெளிவுபடுத்தல் மிகவும் அவசியமாகின்றது - என்றார்.

## இலங்கையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல்வாதிகளுடன் உரையாடியபோது, அவர்கள் முதலீடுகளை பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதாகவே என்னிடத்தில் கூறினார்கள். ஆனால் தற்போது வரையில் அவர்கள் எதனையும் செய்யவில்லை.

கடந்தஎட்டுவருடங்களாக இலங்கையில் முதலீடுகள் மற்றும் தொழில்முயற்சிகள் பற்றிச் செயற்படுபவர் என்ற அடிப்படையில் இலங்கையர்கள் சொல்வதொன்று செய்வது வேறொன்றாகவே உள்ளது. ஆகவே அரசியல்வாதிகளும், மக்களும் ஒன்றிணைந்துசெயற்பட்டால் மாத்திரமே முதலீடுகளை நாட்டினுள் கொண்டுவர முடியும் -என்றார்.

இவர் ஏற்கனவே கடந்த ஆண்டு டிசெம்பர் 12 நடைபெற்ற நிகழ்வொன்றில் அரசியல்வாதியொருவர் தாமதமாக சமுகமளித்தமை குறித்து விசனம் வெளியிட்டிருந்தமை பேசுபொருளாகியிருந்தது.

தென்கொரியாவின் பேரிடர் உதவி நிலையத்தின் தலைவராக உள்ள ஜோ சுங் லீ கடந்த எட்டு வருடங்களாக இலங்கைக்குப் பல்வேறு தருணங்களில் வருகை தந்துள்ளதோடு தென்கொரிய தொழில்நுட்பம் மற்றும் ஏனைய விடயங்களை பரிமாற்றிக்கொள்வற்கான முதலீட்டாளர்களை இலங்கைக்கு அழைத்துவருவதற்கு முயற்சிகளை எடுத்து வருகிறார்.

## பயங்கரவாத .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்பதிலும் எமக்கு முரண்பாடுகள் இல்லை.

பயங்கரவாதத்தைக் கட்டுப்படுத்துவதற்காக விசேட சட்டமொன்று ஏற்பாடு செய்யப்படவேண்டும். அதனையும் நாம் உணர்கின்றோம். உலகிலுள்ள அனைத்து நாடுகளிலும் அவ்விதமானநடைமுறையே பின்னபற்றப்படுகின்றன. ஆனால் புதிதாக கொண்டு வரப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தில் சில விடயங்களில் எமக்கு முரண்பாடுகள் காணப்படுகின்றன.

குறிப்பாக, பயங்கரவாதத்தினைத் தாண்டி சதாரணமக்கள்கருத்துக்களை வெளிப்படுத்துகின்ற கருத்துக்களுக்காக அவர்கள் தண்டிக்கப்படுவதற்கான ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அத்துடன், நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்ட ஜனாதிபதிக்கு அதிகாரங்கள் மேலும் வழங்கப்படுகின்றன.

அவற்றை அகற்றிவிட்டு, அல்லது திருத்தங்களைச் செய்துவிட்டு சட்டத்தினை நடைமுறைப்படுத்துவதில் எமக்குளந்தப்பிரச்சினைகளும் கிடையாது - என்றார்.

## நாளைய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எமக்கு வேறுவழிகிடையாது.

உரிமை உணர்வு கொண்ட சமூகம் என்ற அடிப்படையில் நாம் இதனைச் செய்தாகவேண்டும். எமது உறுதியான எதிர்ப்பை சர்வதேசம் உணர்ந்து கொள்ளக் கூடிய விதத்தில் வெளிப்படுத்துவதே இப்போது உடனடியாக நாம் மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கையாகும். இந்த எதிர்ப்பு நடவடிக்கையே ஓர் முழு அடைப்பாக முன்னேடுக்கப்படுகின்றது. இந்த அடைப்பு வெற்றிபெறநாம் அனைவரும் ஒற்றுமையாகவும் உறுதியாகவும் கட்டுப்பாடாகவும் செயற்படவேண்டும். எமது வடகிழக்கு மாகாணங்களில் வர்த்தகநிலையங்களை அடைத்து போக்குவரத்துக்களை நிறுத்தி, கல்வி நடவடிக்கைகளை கைவிட்டு ஒட்டுமொத்தமாக எமது பிரதேசம் முடங்கி நிற்பதை நாமனைவரும் உறுதிப்படுத்த வேண்டும். இந்த அமைதிவழிப்போராட்டத்தில் சமூகத்தின் சகல தரப்பினரும் பங்கேற்க வேண்டும்.

வர்த்தகநிலையங்களின் உரிமையாளர்கள், பணியாளர்கள், போக்குவரத்து சேவையில் ஈடுபடும் வாகன உரிமையாளர்கள், பணியாளர்கள், முச்சக்கரவண்டி சாரதிகள், சந்தை வர்த்தகர்கள் பலதுறை சார்ந்த தொழிலாளர்கள், மாணவர்கள் என அனைவரும் தமது வழக்கமான பணிகளை நிறுத்தி தமது எதிர்ப்பை வெளிப்படுத்த வேண்டும் என உரிமையுடன் அனைவரையும் கேட்கின்றோம்.

முழு அடைப்புக் காரணமாக உடல் உழைப்பை நம்பிவாழும்தொழிலாளர்கள் மற்றும் பல்துறை சார்ந்த பணியாளர்கள் உட்பட சகலருக்கும் ஏற்படக்கூடிய அசௌகரியங்களுக்கு நாம் வருந்துகின்றோம். இது நம் அனைவரினதும் பொதுவான போராட்டம் என்ற அடிப்படையில் இந்த பாதிப்புக்களை எமதுமக்கள்சகித்துக்கொண்டு தமது பூரண ஆதரவை வெளிப்படுத்த வேண்டும் என பணிவன்புடன் வேண்டுகின்றோம் - என்றுள்ளது

## தேசிய .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கேள்வியாகின்றது.

ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்கவைப் பொறுத்தவரையில், வெவ்வேறு கட்சிகளில் உள்ளவர்களுக்கு அமைச்சுக்களைப் பெற்றுக் கொடுத்து, சிறப்புரிமைகளையும், வரப்பிரசாதங்களையும் பெற்றுக்கொடுத்து அதன்மூலமாகதனதுநிகழ்ச்சிநிரஷ் முன்னெடுப்பதற்கே முயற்சிக்கின்றார்.

அதற்காகவேதேசியஆட்சி பற்றிப் பேசுகின்றார். இந்த நாட்டில் தேசியஆட்சியினால் எந்தவிதமான தேசிய பிரச்சினையும் தீர்க்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது - என்றார்.

## அரக்கத்தன .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செவிடர்களாக்கப்படுவது தவிர்க்க முடியாததாகும். கண்ணிருந்தும் குருடர்களாக்கப்படுவதும் உறுதியானது. ஆகவே இதனை பாராளுமன்றத்தினுள்ளும், அதற்கு வெளியிலும் தோற்கடிக்கவேண்டும். அதற்கு தேசிய மக்கள் சக்தி முன்னிலை வகிக்கத் தயாராகவே உள்ளது - என்றார்.

## தேசிய ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆட்சிக்கான அழைப்பு ஏப்ரல் 25 விடுக்கப்படவுள்ளதாக தகவல்கள்கிடைத்துள்ளன. தேசிய ஆட்சிக்கான அழைப்பை விடுப்பதற்கு முன்னதாக ஜனநாயகத்தினை நிலைநாட்டுமாறே நாம் கோருகின்றோம். நாட்டில் உள்ளுராட்சி மன்றங்களுக்கான தேர்தலை நடத்துவதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும். தேர்தலை நடத்தாது தேசிய ஆட்சியை

உருவாக்க நடவடிக்கைகளைமுன்னெடுப்பதானது தவறானதாகும். தற்போதுள்ள ஆட்சியை மக்கள் முழுமையாக நிராகரித்துவிட்டார்கள். அவர்கள்புதிய ஆட்சியையே எதிர்பார்க்கின்றார்கள். அதற்கான தேர்தலையே முன்னெடுக்க வேண்டும் - என்றார்.

## 13 பரிந்து .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கையளித்துள்ளோம்.

அந்தப் பரிந்துரைகளில் சட்டமூலத்தில்காணப்பட்டசில குறைபாடுகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. குறிப்பாக, தீவிரவாதத்திற்கான அர்த்தம் சரியான முறையில் அமைந்திருக்கவில்லை. அதனை நாம் வரையறுக்குமாறு பரிந்துரைத்துள்ளோம்.

மாகாணபிரதிபொலிஸ்மா அதிபருக்கு நபர் ஒருவரை கைது செய்து தடுத்து வைப்பதற்கான அனுமதியை வழங்கியுள்ளார்கள். அதனை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது.

அந்தவிடயம்பாதுகாப்புச் செயலகத்துடன் பாதுகாப்பு செயலாளரின்கீழ்தான்இருக்க வேண்டும்;. அதேபோன்று நீதிவான் மன்றத்திற்கான அதிகாரங்களையும் சட்டமூலத்தில் அதிகரிக்க வேண்டும்என்பன அவற்றில் முக்கியமானவை - என்றார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு
தொலைபேசி இலக்கம்
076 443 80 22






காலைக்கதிர் Kalaikkathir

# பிரதமர் பதவியில் மாற்றமில்லை பொது ஜன பெரமுன அறிவிப்பு

பிரதமர்பதவியைமாற்றப் போவதில்லை. அதற்கான அவசியமும் தற்போதைக்கு இல்லை என்று பொது ஜன பெரமுன அறிவித்துள்ளது.

உடுகம்பொலவில் ஞாயிற்றுக்கிழமை ஏற்பாடு செய்யப்பட்ட தனது தந்தையாரின் பிறந்த நாள் நிகழ்வில் பங்கேற்றதன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசும்போது அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொது ஜன பெரமுனவுக்குள் எவ்விதப் பிளவும் இல்லை. அவ்வாறு கூறப்பட்டமையானது எதிரணியின் சதித்திட்டமாகும்.அண்மையில் மஹிந்த ராஜபக் ஷ பிரதமராகப் பதவியேற்கவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டமையும் எதிர்க்கட்சிகளின் திட்டமிட்டு பரப்பப்பட்ட வதந்திகளாகும்.

பிரதமர் பதவியை மாற்ற வேண்டியஅவசியம்இல்லை. பலமானஆட்சியைஉருவாக்க நாடாளுமன்றத்தில் பெருமளவானோர் எம்முடன் இணைந்துள்ளனர். சர்வதேச நாணயநிதியத்தின்நிபந்தனைகளை நடைமுறைப்படுத்துவதற்கான அனுமதியைப் பெற்றுக்கொள்ளக் கூடிய ளவு பெரும்பான்மை எம்வசமுள்ளது. வீழ்ச்சியடைந்துள்ள நாட்டை மீட்டெடுப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்க வேண்டும்என்பதையேநாட்டு மக்கள் விரும்புகின்றனர். மக்களின் தீர்மானங்களுக்கு அமைவாகவே நாம் முடிவுகளைஎடுத்து வருகின்றோம். அதனையே தொடர்ந்தும் பின்பற்றுவோம் - என்றார்.

# வரணியில் காற்றால் தூக்கி வீசப்பட்ட கூரை



தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட வரணி-நாவற்காடு பகுதியில் சனிக்கிழமை பிற்பகல் வீசியகடும்காற்றுகாரணமாக ஆலயம் மற்றும் வீடுகள் சேதமடைந்துள்ளன.

திடீரென வீசிய காற்றினால் நாவற்காட்டில் அமைந்துள்ள ஆலயம் ஒன்றின் மேற்கூரை தூக்கி வீசப்பட்டிருப்பதுடன் - தென்னை மற்றும் பனை மரங்கள் முறிந்துள்ளன. வேறு சில வீடுகளும் சேதமடைந்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.



அத்துடன் மரங்கள் வீதிகளில் முறிந்து விழுந்து போக்குவரத்திற்குத் தடை ஏற்பட்டதுடன் - மின்சாரமும் சிறிது நேரம் தடைப்பட்டதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

## கோட்டாவுடன் சேர்ந்து

# நாட்டை நாசமாக்கியதில் பஸிலுக்கு முக்கிய பங்கு

## - விமல் பகிரங்கக் குற்றச்சாட்டு

‘கோட்டாபய ராஜபக்சவுடன் சேர்ந்து நாட்டை நாசமாக்கியவர்களில் பஸில் ராஜபக்ச முக்கிய பங்கு வகிக்கின்றார்‘ - என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

கோட்டாபயராஜபக்சவை ஜனாதிபதியாக்குவதற்கு நாம் முடிவெடுத்த போது அவர் தோல்வியடைந்த - இயலாத தலைவராக இருக்கவில்லை.

மஹிந்த ராஜபக்சவின் ஆட்சிக்காலத்தில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக - நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளராக அவருக்குக் கொடுத்த பணிகளை வெற்றிகரமாக செய்து முடித்தார்.



ஆனால், கோட்டா ஜனாதிபதியானவுடன் பி.பி. ஜயசுந்தர, மிலிந்த மொரகொட, அமெரிக்கத் தூதுவர் மற்றும் பஸில் ராஜபக்சஎனஎல்லோரினதும் வலையிலும்வீழ்ந்துவிட்டார்.

இறுதிக் காலத்தை அமெரிக்காவில் கழிக்க வேண்டும் என்பதுதான் கோட்டாவின் திட்டம். அதற்காக அமெரிக்காவைச் சந்தோஷப்படுத்த வேண்டிய தேவை கோட்டாவுக்கு ஏற்பட்டது.

அமெரிக்கா இழுத்த இழுப்புக்கெல்லாம் வளைத்துக் கொடுத்து இறுதியில் நாட்டை நாசமாக்கிவிட்டார் கோட்டா. அவருடன் சேர்ந்து நாட்டைநாசமாக்கியவர்களில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின்தேசியஅமைப்பாளர் பஸில்ராஜபக்சமுக்கிய பங்குவகிக்கின்றார்.‘-என்றார்.

# நாட்டு வளங்களை தாரைவார்க்க ரணிலின் ஆட்சியில் சதித் திட்டம்

## குற்றஞ்சாட்டுகிறார் சஜித்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஆட்சியினால் சர்வதேச நாணய நிதிய ஒப்பந்தத்தினுள் நாட்டின் வளங்களைதாரைவார்க்கும் சதித்திட்டமொன்று முன்னெடுக்கப்படுவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச குற்றஞ்சாட்டியுள்ளார்.



ஞாயிற்றுக்கிழமை விடுத்த விசேட காணொலி அறிவிப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். அதில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது சர்வதேச நாணய நிதியத்துடன் உடன்பாடு எட்டப்பட்டுள்ளது. இதனை அடிப்படையாக வைத்து திரைக்குப் பின்னால் சில நடவடிக்கைகள் முன்னெடுக்கப் படுகின்றன.

குறிப்பாக, நாட்டின்தேசிய சொத்துக்களை வெளிநாடுகளுக்கும், தமது முதலாளி வர்க்க நண்பர்களுக்கும் தாரைவார்த்துக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஆட்சி முன்னெடுத்து வருகின்றது.

இந்தச் செயற்பாட்டை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது. இந்த நாட்டு மக்களின் தேசிய வளங்களை விற்பனை செய்வதற்கு இடமளிக்கப்போவதில்லை. அவ்விதமான செயற்பாடுகளை மையப்படுத்திய கொள்கைகளை நான் முழுமையாக நிராகரிக்கின்றேன்.

சிங்கப்பூர், மலேசியா போன்று இலாபமீட்டும் நிறுவனங்களை மேலும் இலாபமீட்டுவதற்கும், நட்டத்தில் இயங்குபவற்றை இலாபமீட்டச்செய்வதற்கும் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். அதற்கு நாம் ஒத்துழைப்புக்களை வழங்குவதற்குத் தயார் - என்றார்.



காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ஊடக அறிக்கைகள் மட்டுமே போதுமானவையல்ல

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை மீளப்பெற வலியுறுத்தியும் தமிழரின் மரபுரிமைகள் மீது தொடர்ந்து நிகழ்த்தப்பட்டுவரும் தாக்குதல்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் நாளை செவ்வாய்க்கிழமை வடக்கு – கிழக்கு எங்கும் முழுமையான கடையடைப்புக்கு 7 தமிழ்க் கட்சிகள் அழைப்பு விடுத்துள்ளன.

தமிழ் அரசுக் கட்சி, புளொட், ரெலோ, ஈபிஆர்எல்எவ், தமிழ் மக்கள் கூட்டணி, ஜனநாயகப் போராளிகள் கட்சி, தமிழ்த் தேசியக் கட்சி என்பன இணைந்து இந்தப் போராட்டத்துக்கானஅழைப்பைவிடுத்துள்ளன. வெடுக்குநாறி மலையில் இருந்த ஆதி லிங்கம் உடைத்தழிக்கப்பட்டதைத் தொடர்ந்து எதிர்ப்பைக் காட்டுவதற்காககூடிய தமிழ்க் கட்சிகள் பொது அமைப்புக்கள் சந்திப்பிலேயே இந்தப் போராட்டம் தொடர்பிலான அடித்தளம் இடப்பட்டது.

அதற்கிடையில் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை சித்திரை 25 நாடாளுமன்றத்தில் முன்வைப்பதாக ஆட்சியாளர்கள் அறிவித்தனர். எனவே அந்தத் தினத்தில் தமிழர்களின் எதிர்ப்பை வெளிப்படுத்தக்கூடிய வகையில் இந்தப் போராட்டத்திற்கான நாளை தமிழ்க் கட்சிகள் கூடிக் குறித்தன. முன்னதாக, தமிழர் தாயகத்தில் பௌத்த சிங்கள ஆக்கிரமிப்பை எதிர்த்து வடக்கு கிழக்கில் உள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரே நேரத்தில் ஆர்ப்பாட்டங்களை நடத்துவது என்றே முடிவு செய்யப்பட்டிருந்தது. பின்னர், பயங்கரவாதத் தடைச் சட்டமும் சேர்ந்துகொண்டதும் அந்தப் போராட்டம் முழு அடைப்புப் போராட்டம் அறிவிக்கப்பட்டது.

போராட்டம் அறிவிக்கப்பட்டது முதல் அதனை வெற்றிபெறச் செய்ய தமிழ்க் கட்சிகள் என்ன செய்தன? ஊடகங்களில் கடந்த சில தினங்களாகத் தொடர்ச்சியாக அறிக்கைகளை வெளியிட்டது தவிர என்ன செய்தன? சில இடங்களில் போராட்டத்திற்கு அழைப்பு விடுத்துச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. யாழ். நகரப் பகுதியில் ஒருநாளின் சில மணித் துளிகள் மட்டும் அரசியல் கட்சிகளின் தலைவர் துண்டறிக்கைகள் வழங்கி தமது போராட்டத்திற்கு ஆதரவு திரட்டினர். இவற்றைத் தவிர்த்துப் பார்த்தால் வேறு நடவடிக்கைகள் எவையும் எடுக்கப்பட்டதாகத்

தெரியவில்லை. ஊடகங்களில் அறிக்கை விடுவதற்கு அப்பால் போராட்டத்திற்கு ஆதரவு திரட்ட தமிழ்க கட்சித் தலைவர்கள் மேற்கொண்ட கட்டமைப்பு என்று கூறுவதற்கு எதுவும் இல்லை.

ஊடக அறிக்கைகளால் மட்டுமே ஒரு போராட்டம் வெற்றிபெற்றுவிட முடியாது என்பதை அரசியல் தலைவர்கள் புரிந்துகொள்ளவேண்டும். இன்றைய சூழலில் அச்சு ஊடகங்களைப் படிப்போர் மிகக் குறைவானவர்களே. டிஜிட்டல் ஊடகங்கள் மற்றும் காட்சி ஊடகங்களிலும் செய்திகளைப் பார்ப்போர் எண்ணிக்கை ஏனைய நிகழ்ச்சிகளைப் பார்ப்போருடன் ஒப்பிடும்போது மூன்றிலொரு பகுதி மட்டுமே. வானொலி கேட்போர் எண்ணிக்கையும் கணிசமான அளவு வீழ்ச்சி கண்டுள்ளது.

இப்படிப்பட்ட நிலையில் சுமார் 40 விழுக்காடு மக்களை மட்டுமே ஊடகங்களால் சென்றடைய முடியும். எஞ்சிய மக்களைச் சென்றடைவதற்கான தனிப்பட்ட வழிமுறைகள், பொறிமுறைகள் குறித்து அரசியல் கட்சிகள் அறிந்து வைத்திருக்க வேண்டும். போராட்டங்களுக்கு மக்கள் வருவதில்லை என்கிற குறை அரசியல் கட்சிகளுக்கு உண்டு. பெரும்பாலான மக்களுக்குப் போய்ச் சேரவேண்டிய செய்தி போய்ச் சேராதபோது அவர்கள் எப்படிப் போராட்டத்தோடு இணைந்து கொள்வார்கள்? நாளைய போராட்டத்திலும்கூட வடக்கில் அது பற்றி ஏற்பட்டுள்ள விழிப்புணர்வு கிழக்கில் ஏற்பட்டிருப்பதாகச் சொல்லிவிட முடியாது. காரணம் அங்குள்ள மக்களை அந்தச் செய்தி சென்று சேர்ந்திருக்கும் வீதம் மிகக் குறைவாக இருப்பதே. இந்த நிலையில் மக்கள் போராட்டத்திற்கு ஒத்துழைப்பதென்பது மிகப் பெரிய விடயம். எனவே தமிழ்க் கட்சிகள் போராட்டங்களை வெறுமனே ஊடகங்களில் அறிவிப்பதோடு நின்றுவிடாமல் அவற்றை மக்களிடம் கொண்டு செல்வதற்கான பொறிமுறைகளை உருவாக்கவேண்டும். குறைந்தபட்சம் தத்தமது கட்சிகளின் கிளைகள் ஊடாக மக்களை

நாடிச் செல்வதற்கான கட்டமைப்புக்களையாவது அவை கொண்டிருக்கவேண்டும். அவற்றின் ஊடகப் பணியாற்றவேண்டும். அப்போதுதான் போராட்டங்கள் வெற்றிபெறுவதற்கு ஏதுவான சூழல் உருவாகும்.

# பதவிகள் நிரந்தரம் இல்லை; துரோகிகளுக்கு இடமில்லை

**– இப்படிக் கூறுகின்றார் மஹிந்த**



'கட்சியை விட்டு வெளியேறி - அரசிலிருந்து வெளியேறி கட்சிக்கும்

நாட்டுக்கும் துரோகம் செய்பவர்களின் பதவிகள் பறிபோகும். அதுதான்

பீரிஸுக்கும் நடந்தது' - என்று ஷ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தலைவர்

மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

மொட்டுக் கட்சியின் தவிசாளராகச் செயற்பட்டு வந்த பேராசிரியர் ஜி.எல்.

பீரிஸ் நீக்கப்பட்டு அப்பதவிக்கு சிரேஷ்ட பேராசிரியர் உத்துராவல தம்மரதன தேரர் நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாகத் தற்போது டலஸ் அணி பக்கம் உள்ள பீரிஸ் எம்.பி. தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மொட்டுவின் தலைவர் மஹிந்த ராஜபக்ச எம்.பி. கருத்துத் தெரிவிக்கும் போது,

'பதவிகள் நிரந்தரம் இல்லை. அது முதலில் தேடி வரும், பின்னர் பறிபோகும் அல்லது பதவியை இராஜினாமா செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் வரும். நாட்டின் நன்மை கருதி பிரதமர் பதவியைக்கூட நான் இராஜினாமா செய்திருந்தேன்.

தற்போது ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் சபையின் தீர்மானத்துக்கமைய மொட்டுவின் தவிசாளராக இருந்த பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் நீக்கப்பட்டு புதிய தவிசாளராக சிரேஷ்ட பேராசிரியர் உதுராவல தம்மரதன தேரர் நியமிக்கப்பட்டுள்ளார்.

பொதுஜன பெரமுனவின் பொதுச் சபையின் இந்த நடவடிக்கையை எவரும் சவாலுக்குட்படுத்த முடியாது. கட்சியின் கோட்பாட்டை மீறிச் செயற்பட்ட காரணத்தால்தான் பீரிஸின் பதவி பறிபோனது. இதுதான் உண்மை.

கட்சியை விட்டு வெளியேறி - அரசிலிருந்து வெளியேறி கட்சிக்கும் நாட்டுக்கும் துரோகம் செய்பவர்களின் பதவிகள் பறிபோகும் பீரிஸுக்குப் பல தடவைகள் அழைப்பு விடுத்திருந்தோம். ஆனால், அந்த அழைப்புக்களை அவர் உதாசீனம் செய்திருந்தார்.' - என்றார். (02)

# போலியான யாப்புக்கு அமைவாகவே பெரமுனவுக்கு புதிய தவிசாளர் தெரிவு

**நீதிமன்றம் செல்வது உறுதி என்கிறார் சரித ஹேரத்**



பொதுஜன பெரமுனவின் அடிப்படையாப்பு அகற்றப்பட்டுப் போலியான புதிய யாப்புக்கு அமைவாகவே தவிசாளர் நியமனம் இடம்பெற்றுள்ளதாக சுதந்திர மக்கள் சபை உறுப்பினரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கலாநிதி. சரித ஹேரத்

தெரிவித்துள்ளார்.

நாவலவில் உள்ள அக்கட்சியின் தலைமையகத்தில் ஞாயிற்றுக்கிழமை செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் சனிக்கிழமை இடம்பெற்ற

கட்சியின் 2023ஆம் ஆண்டுக்கான பொதுச்சபை கூட்டமானது கட்சியின் அடிப்படை யாப்புக்கு முரணானது.

ஶ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் உண்மையான யாப்பு தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. பொதுச்சபை கூட்டத்தின் கட்டமைப்பு, அதிகாரங்கள் உள்ளிட்டவை தொடர்பில் கட்சி யாப்பில் குறிப்பிடப்படவில்லை.

ஆகவே யாப்பில் இல்லாத விடயங்களை முன்னிலைப்படுத்தி கூட்டத்தை நடத்தி, எவ்வாறு தீர்மானங்களை எடுக்க முடியும்? போலி யாப்பினை முன்னிலைப்படுத்தியே பொதுஜன பெரமுனவின் புதிய தவிசாளர் தெரிவு செய்யப்பட்டுள்ளார். ஆகவே பொதுச்சபை கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை நாம் நிச்சயம் நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்துவோம்.

ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுன அடிப்படை கொள்கையை புறக்கணித்து ஐக்கிய தேசிய கட்சிக்கு அடிபணியும் வகையில் செயற்படுகிறது. இதனால் பொதுஜன பெரமுனவுக்கு ஆதரவு வழங்கிய மக்கள் அரசியல் ரீதியில் செய்த தவறை திருத்திக்கொள்ள

தேர்தலை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள் - என்றார்.

# யாப்பிற்கு அமையவே பீரிஸ் நீக்கப்பட்டார்

**அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவிப்பு**



பெரமுனவின் அடிப்படை யாப்பிற்கு அமையவே தவிசாளர் பதவியிலிருந்து பேராசிரியர் ஜீ.எல்.பீரி;ஸ் நீக்கப்பட்டுள்ளார். நீதிமன்றை நாடுவது அவரது அடிப்படைய உரிமை என்று அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

உடுகம்பொலவில் அமைந்துள்ள தனது தந்தையாரும், முன்னாள் அரசியல் வாதியுமான மறைந்த ரெஜி ரணதுங்கவின் நினைவிடத்தில் அவரது 86ஆவது பிறந்த தினத்தை

முன்னிட்டு ஞாயிற்றுக்கிழமை ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வில் அவர் பங்கேற்றிருந்தார். இதன்பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொது ஜன பெரமுன நாட்டுக்கு தேவையான தீர்மானத்தையே எந்த சந்தர்ப்பத்திலும் எடுத்தது, எடுத்து வருகின்றது. பெரமுனவின் அடிப்படையாப்பின் பிரகாரமே வருடாந்தம் பொதுச்சபை கூட்டப்பட்டு முடிவுகள் எடுக்கப்படுகின்றன.

அதற்கமைய கட்சியின் செயற்பாடுகளிலிருந்து விலகி யிருக்கும் ஜீ.எல்.பீரிஸ் தவிசாளர் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்.

கட்சி பதவியை நீக்கிய தீர்மானம் தொடர்பில் அவர் நீதிமன்றத்திற்கு செல்வதாக குறிப்பிட்டுள்ளார். அது அவரது அடிப்படை உரிமை. எவ்வாறிருப்பினும் அவர் மனசாட்சியின் பிரகாரம் செயற்படுவார் என்று நம்புகின்றோம் - என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup
Fruit Salad
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# Malaysia Tour

## 5 DAYS 4 NIGHTS













### INCLUSION

» 04 Night stay in Kuala Lumpur
» Daily breakfast at hotel
» Return AirTicket
» Getting Highland tour with cable car
» City tour on arrival day
» Evening tour to twin tower
» Batu caves temple visit
» Putrajaya city tour

**LKR 148,000.00**
For Early Booking

Travel Date: 19 - 23 May 2023

Semba Services (Pvt) Ltd.
551A, Kasthuriyar Road ,Jaffna
+94 77 307 8799


இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 24.04.2023இல் வெளியிடப்பெற்றது.

பக்கங்கள்: 04

# காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 04 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 10 ஞாயிற்றுக்கிழமை 23.04.2023 கதிர் 37

## ரணிலோடு செயற்படும் எம்மால் சஜித்துடனும் இணைய முடியும்

### சொல்கிறார் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க



ரணிலுடன் இணைந்து செயற்படும் எமக்கு சஜித்து டன் இணைந்து செயற்படு வதில் எவ்விதமான பிரச்சினைகளும் இல்லை என்று அமைச்சர் பிரசன்ன ரண துங்க தெரிவித்தார்.

கம்பஹாவில் சனிக்கிழமை நடைபெற்ற மக்கள் சந்திப்பொன்றில் 2

# திருடர்களுடன் இணைந்து ஆட்சியமைக்க முடியாது

### போட்டுத் தாக்குகிறார் சரத் பொன்சேகா



திருடர்களுடன்சேர்ந்து தேசிய ஆட்சியை அமைக்க முடியாது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ல் சரத்பொன்சேகா தெரிவித்துள்ளார்.

கோட்டேயில் உள்ள அவருடைய அலுவலகத்தில் இன்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டின் எதிர்காலத்தினைக் கருத்திற்கொண்டு தேசிய ஆட்சி அமைக்கப்படுவது வரவேற்கத்தக்கது. அது வெறுமனே ஒரு வருடத்துக்கானதாக இருக்க முடியாது. அப்படிச் செய்வதென்றால், அது அதிகாரத்தைப் பாதுகாத்துக்கொள்வதற்கான முயற்சிதான்.

அதேநேரம், தற்போது ஆட்சியில் உள்ளவர்கள் திருடர்கள். ஊழல் மோசடிகளுடன் தொடர்புடையவர்கள். அவர்களுடன் இணைந்து கொள்வதற்கு நாம்தயாரில்லை. அவர்கள் செய்த பாவங்களிலும், திருட் டுக்களிலும் நாம் பங்காளிகளாவதற்குத் தயாரில்லை. அந்தப் பழி பாவங்களை நாம் சுமக்க முடியாது. திருடர்கள் உள்ள தேசிய ஆட்சியில் இணைந்துகொள்ள முடியாது என்றார்.

## சர்வாதிகாரத்தை நிலைநிறுத்தும் உத்தியே தேசிய ஆட்சி முயற்சி

### திஸ்ஸ அத்தநாயக்க சாடல்



தேசிய ஆட்சி ஒன்றை அமைப்பதற்கான முயற்சியானது, சர்வாதிகாரத்தினை நிலைநிறுத்துவதற்கான உத்தியென்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

தேசிய ஆட்சி தொடர்பில் தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்தும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையின் வரலாற்றில் அமைக்கப்பட்ட தேசிய ஆட்சியாக இருக்கலாம் அல்லது அதுபற்றிய பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட்ட காலங்களாக இருக்கலாம் அனைத்துமே ஜனாதிபதியோ பிரதமரோ தனது பதவியை பாதுகாத்துக்கொள்வதற்கான உத்தியாகவே இருந்து வந்துள்ளது.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தேசிய ஆட்சி என்ற பேச்சானது, நாட்டின் எதிர்காலத்திற்கானதாகவோ மக்களின் தேவை அடிப்படையிலானதாகவோ இருக்கவில்லை.

இந்த நிலையில்தான் தற்போதும் தேசிய ஆட்சி பற்றிய பேச்சுக்கள் வருகின்றன. அவையும், அதிகாரத்தை தக்கவைப்பது என்பதற்கு அப்பால் சர்வாதிகாரத்தினை நிலைநிறுத்துவதை நோக்கமாகக் கொண்டதுதான் – என்றார்.

## அரகல போராட்டத்தால் முறைமை மாறவில்லை

### தலைமை மட்டுமே மாறியது என்கிறார் நாமல்



அரகலய போராட்டத்தால் தலைமைகள் மாற்றப்பட்டுள்ளதே தவிரவும் முறைமை மாற்றப்படவில்லை என்று பொது ஜன பெரமுனவின் நாமல் ராஜபக் தெரி வித்துள்ளார்.

கோட்டேயில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரகலய போராட்டத்துடன் எனக்குப் பிரச்சினை இல்லை. அவர்கள் முறைமை மாற்றம் ஒன்றைக் கோரிப் போராடினார்கள். அது நாட்டின் எதிர்காலத்திற்கு அவசியமானது.

ஆனால் அவர்களின் போராட்டத்தினால் நிகழ்ந்தது என்ன? கோட்டாபய ராஜபக்வுக்கு பதிலாக ரணில் விக்கிரமசிங்க அந்தப் பதவியை வகிக்கின்றார். இது முறைமை மாற்றம் அல்ல. நாட்டில் தலைமை மாற்றம் மட்டும் தான் நிகழ்ந்துள்ளது.

அதனைவிடவும், நாடாளுமன்ற உறுப்பினர்களின் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் கொல்லப்பட்டார். ஐந்நூறுக்கும் மேற்பட்ட வாகனங்கள் தீக்கிரையாக்கப்பட்டன. தற்போது நாடு, அந்த இழப்புக்களில் இருந்து மீளமுடியாத நிலைமைக்குள் தள்ளப்பட்டுள்ளது.

இது முறைமை மாற்றம் செய்வதற்கான வழி அல்ல. சட்டங்கள் இயற்றப்படவேண்டும். கொள்கைகள் வகுக்கப்பட வேண்டும்.

அதனடிப்படையில்தான் முறைமை மாற்றம் செய்யப்பட வேண்டும். அதனை மையப்படுத்தியே அரகலய இடம்பெற்றிருக்கவேண்டும் – என்றார்.

### எக்ஸ்பிரஸ் பேர்ல் கப்பல் பேரிடர்

## இழப்பீடு கேட்கும் நடவடிக்கை சிங்கப்பூரில் நாளை தொடக்கம்

எக்ஸ்பிரஸ் பேர்ல் கப்பலால் ஏற்பட்ட பேரிடருக்கு இழப் பீடு கோரி நாளை சிங்கப்பூர் மேல் நீதிமன்றத்தில் சட்ட நடவடிக்கைகள் தொடங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வழக்கை இலங்கையில் நடத்தவேண்டும் என்ற கோரிக்கை உள்ளபோதும், வழக்கின் பிரதிவாதிகள், கப்பலின் பதிவுசெய்யப்பட்ட உரிமையாளர், நடத்துநர் மற்றும் முகாமையாளர்கள் உட் பட வணிக இருப்பு சிங்கப்பூராக இருப்பதால், இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

அந்த அடிப்படையில் இலங்கைக் கடற்பரப்பில் ஏற்பட்ட பேரழிவு தொடர்பான இழப்பீடு கோரும் நடவடிக்கையை முன்னெடுப்பதற்கு சிங்கப்பூர் பொருத்தமான இடமாக இருக்கும் என்று தீர்மானித்ததாக சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கப்பலில் இருந்து வெளியேற்றப்பட்ட பிளாஸ்டிக் துகள்களால் இலங்கையின் கடல்சார் சுற்றுச்சூழலுக்கு நீண்டகாலமாக ஏற்படும் சேதத்தின் முழு அளவு மற்றும் ஈர்ப்புத்தன்மை குறித்த இந்த நடவடிக்கை, சர்வதேச கவனத்தை ஈர்க்கும் என்றும் சட்டமா அதிபர் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

2021 மே 20 அன்று 1488 கொள்கலன்களுடன் சிங்கப்பூர் கொடியிடப்பட்ட கப்பல் தீப்பிடித்தது. அதில், 25 தொன் நைட்ரிக் அமிலம், 348 தொன் எண்ணெய் மற்றும் 75 பில்லியன் சிறிய பிளாஸ்டிக் துகள்கள் உட்பட ஆபத்தான பொருட்களுடன் மொத்தம் 81 கொள்கலன்கள் இருந்தன.

கப்பல் தீப்பிடித்து எரிந்து முழுமையாக கடலில் 2

## பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை அன்று ஆதரித்தோர்தான் இன்று எதிர்த்தரப்பினர்



பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்திற்கு அமைச்சரவையில் கையுயர்த்தி அனுமதி அளித்தவர்களே தற்போது எதிர்க்கட்சியில் உள்ளார்கள் என்று ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்த் தன தெரிவித்துள்ளார்.

புதிய பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம் நாடாளுமன்றத்தில் ஏப்ரல் 25 சமர்ப்பிக்கப்படவுள்ள நிலையில், அந்தச் சட்டமூலத்தை மீளப்பெற வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் குரல் எழுப்பிவரும் நிலையில், அவர் இதனைத் தெரி வித்துள்ளார்.

இது தொடர் அவர் மேலும் தெரிவித்ததாவது:

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் தற்போது கொண்டு வரப்படுவதைப் போன்று சித்தரிக்கின்றார்கள். இது 2018 ஆம் ஆண்டே கொண்டு வரப்பட்டதுதான்.

அப்போது இந்தச் சட்டமூலத்திற்கு அமைச்சரவை அனுமதி அளித்தது. அதில் நானும் ஒருவராக இருந்திருக்கின்றேன்.

அவ்வாறு அமைச்சரவையில் கையுயர்த்தி அனுமதி அளித்தவர்கள்தான் தற்போது எதிர்க்கட்சியில் இருக்கின்றார்கள்.

ஆகவே அவர்கள் இந்தச் சட்டமூலத்தினை எதிர்க்க மாட்டார்கள். அவ்வாறு எதிர்க்க வேண்டிய எந்த அடிப்படைகளும் கிடையாது - என்றார்.

# நெடுந்தீவு கொலையாளி கைது அவரிடமிருந்து நகைகள் மீட்பு

### ஜேர்மனி செல்லும் பணத் தேவைக்காக கொன்றதாக வாக்குமூலம்

நெடுந்தீவில் வயோதிபர்கள் ஐவரை சரமாரியாக வெட்டிக் கொலை செய்த கொலையாளி கைது செய்யப்பட்டிருக்கின்றார் என்று யாழ். மாவட்டக் குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸ் பொறுப்பதிகாரி பொலிஸ் கண்காணிப்பாளர் மேனன் தெரிவித்தார்.

"கொலையாளி புங்குடுதீவில் மறைந்திருந்தபோது கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து கொள்ளையிடப்பட்ட நகைகள் மற்றும் அலைபேசிகள், கொலையுண்டவர்களின் கடவுச் சீட்டுக்கள் என்பன மீட்கப்பட்டன" என்றார் அவர். கைது செய்யப்பட்டிருக்கும் சந்தேகநபர் கொலை நிகழ்ந்த வீட்டிலேயே தங்கியிருந்துள்ளார். கொலை நிகழ்ந்த சனிக்கிழமை காலை 8 மணிக்கு நெடுந்தீவில் இருந்து புறப்பட்ட படகில் அவர் அங்கிருந்து புறப்பட்டுள்ளார்.

அவர்களின் வீட்டில் தங்கியிருந்தேன். எனக்கு பணம் தேவை என்பதனால் அவர்கள் அணிந்திருந்த நகைளை அபகரிக்க முடிவெடுத்தேன். நகைகளை மட்டும் கொள்ளையிட்டால் பொலிஸார் பிடித்துவிடுவார்கள் என்ப தால், சம்பவத்தை திசை திருப்பவே அனைவரையும் கொலை செய்தேன் என்று கைது செய்யப்பட்டவர் வாக்குமூலம் அளித்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபரிடமிருந்து 26 தங்கப்பவுண் நகைகள், ஆடைகள் மற்றும் அலைபேசிகள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

நெடுந்தீவு மாவிலி இறங்குதுறையை அண்டிய வீட்டில் இருந்த 5 முதியவர்கள் சரமாரியாக வெட்டிப் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் சனிக்கிழமை தமிழர்கள் அனைவரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியிருந்தது. அதே வீட்டிலிருந்த 100 வயது மூதாட்டி ஒருவர் வெட்டுக் காயங்களுடன் உயிருடன் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார். அவரது உடல்நிலை தேறிவருவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் மஞ்சுல செனரத்தின் கட்டளையில் யாழ்ப்பாணம் பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகர் விந்தின் வழிகாட்டலில் பொலிஸ் பரிசோதகர் மேனன்



தலைமையிலான பொலிஸ் குழுவினர் துரித விசாரணைகளை முன்னெடுத்தனர்.

நேற்றிரவே சந்தேகநபரைப் புங்குடுதீவில் வைத்துக் கைது செய்தனர். சந்தேகநபர், ஜேர்மனியில் கொலை முயற்சி வழக்கொன்றில் குற்றவாளியாகக் கண்டறியப்பட்டதை அடுத்து இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டவர் என்று பொலிஸார் தெரிவித்தனர். 51 வயதான அவர், தான் மீண்டும் ஜேர்மனி செல்வதற்கான பணத்தைப் பெறவே ஐவரையும் கொலை செய்து அவர்களின் ஆபரணங்களைத் திருடியதாகத் தெரிவிதுள்ளார்.

நான் நெடுந்தீவு வந்தால் குறித்த வயோதிபர்களின் வீட்டில் தான் தங்கிச் செல்வேன். அது போன்று சில தினங்களுக்கு முன் வந்தபோதும் அங்கு தங்கியிருந்தேன். அங்கு வெளிநாட்டிலிருந்து வந்திருந்தவர்கள் நகைகள் அணிந்திருந்தனர். அனைவரது நகைகளையும் அபகரித்து விற்பனை செய்து, அந்தப் பணத்தில் கடவுச்சீட்டு பெற்று நான் மீளவும் ஜேர்மனிக்கு செல்ல திட்டமிட்டேன்.

அதனால் நேற்று அதிகாலை 4.30 மணியளவில் அனைவரையும் கொலை செய்துவிட்டு நகைகளை எடுத்துக்கொண்டு தப்பிக்க எண்ணினேன். நகைகளை மட்டும் அபகரித்துச் சென்றால் பொலிஸார் எளிதில் பிடித்துவிடுவார்கள், அதனால் விசாரணையை திசை திருப்ப அனைவரையும் கொலை செய்தேன் என்று சந்தேகநபர் ஒப்புதல் வாக்குமூலம் அளித்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபரை நெடுந்தீவுக்கு அழைத்துச் சென்று ஏனைய சான்றுப்பொருள்களை மீட்கும் பணியில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

சந்தேகநபர் இன்று மாலை ஊர்காவற்றுறை நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப்படவிருந்தார்.

# ஒட்டுசுட்டானில் கடும் காற்று வீடுகள் பலவும் சேதமாகின






(சண்முகம் தவசீலன்)

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் வீசிய கடும் காற்றினால் சனிக்கிழமையும் வீடுகள் பல சேதமடைந்தன. முல்லைத்தீவு மாவட்டத்தில் வியாழக்கிழமை மாலை ஒட்டுசுட்டான் பிரதேசத்திற்கு உட்பட்ட முத்துஐயன்கட்டு கிராம அலுவலர் பிரிவில் ஜீவநகர்

மாதிரி கிராமத்தில் வீசிய கடும் காற்றினால் வீடுகள் பல சேதமடைந்தன.

இந்நிலையில் வெள்ளிக்கிழமை மாலை மீண்டும் வீசிய கடும் காற்றினால் முத்துஐயன்கட்டு–முத்துவிநாயகபுரம் பகுதியில் மேலும் பல வீடுகள் சேதமடைந்துள்ளன

கடும் காற்றும் மழையும் பெய்துள்ள நிலையில் வீசிய கடும் காற்றினால் வீடு ஒன்றின் கூரையில் பொருத்தப்பட்டிருந்த 12 சீற்கள் தூக்கி வீசப்பட்டன. வீடு சேதமடைந்தது. தனபாலசிங்கம் வசந்தாதேவி என்பவரின் வீடே இவ்வாறு காற்றினால் சேதமடைந்தது..

இதேவேளை கிராமத்தில் உள்ள மேலும் பல வீடுகள் சேதமடைந்துள்ளதாக மக்கள் தெரிவித்துள்ளார்கள் ஓடுகள் தூக்கிவீசப்பட்டுள்ளதுடன் தற்காலிக கொட்டிலில் வசித்துவரும் குடும்பம் ஒன்றின் வீடும் காற்றினால் கடும் சேதமடைந்துள்ளது.

கடந்த பல நாட்களாக கடும் வெப்பம் நிலவிய நிலையில் இரண்டு தினங்களாக குறித்த பகுதியில் கடும் காற்றுடன் மழையும் பெய்துள்ளது.

# முதல் வீடு கையளிப்பு



(நூருல் ஹுதா உமர்)

நளீர் பௌண்டன் அமைப்பின் பத்தாவது ஆண்டை முன்னிட்டு வசதி குறைந்த தேவையுடைய மக்களுக்கு பத்து வீடுகள் கட்டிக்கொடுக்கும் திட்டத்தின் கீழ் முதலாவது வீட்டை கையளிக்கும் நிகழ்வும், இரண்டாவது வீட்டுக்கான அடிக்கல் நடும் நிகழ்வும் நளீர் பௌண்டன் நிறுவுனர் ஏ.எம்.நளீரின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் நளீர் பௌண்டேன் தலைவர் எம்.ஏ.ரஹீம் தலைமையில் இடம்பெற்றது.

ஆஸ்திரேலிய சிட்னி பிரதர்ஸ் நிதியனுசரணையில் சாளம்பெங்கேணி நான்கில் அமைக்கப்பட்ட இந்த வீட்டைக் கையளிக்கும் நிகழ்விலும், சாளம்பெங்கேணி மூன்றில் அமைக்கப்பட உள்ள வீட்டுக்கான அடிக்கல் நடும் நிகழ்விலும், அம்பாறை மாமவட்டச் செயலர் ஜே.எம்.ஏ. டக்ளஸ் பிரதம அதிதியாக கலந்து கொண்டு வீட்டின் உரிமையாளர்களிடம் வீட்டை கையளித்தார். இந்நிகழ்வில் கௌரவ அதிதியாக நாவிதன் வெளி உதவி பிரதேச செயலாளர் பீ. பிரணவரூபன், விசேட அதிதியாக நாவிதன்வெளி பிரதேச செயலக கணக்காளர் கே. றிஸ்வி யஹசர் அவர்களும் கலந்து கொண்டார்.

மேலும் நளீர் பௌண்டன் அமைப்பின் செயலாளர் ஏ.எல். றிஸான், பொருளாளர் எம்.சி. பயாஸ், உப தலைவர் ஏ.எல்.எம். நௌபர் உட்பட நிர்வாகிகள், அங்கத்தவர்கள், ஊர்பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

# “பாடசாலை எங்களுடையது”

## நற்பிட்டிமுனையில் பவனி




(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

அம்பாறை மாவட்டத்தின் கல்முனை கல்வி வலயத்திற்குட்பட்ட சுமார் 75 வருடகால வரலாற்றைக் கொண்ட நற்பிட்டிமுனை அல்–அக்ஸா மத்திய மகா வித்தியாலய பழைய மாணவர்கள் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்த சமூகத்திற்கும் பாடசாலைக்கும்

இடையில் பிணைப்பை ஏற்படுத்தும் பாடசாலை எங்களுடையது எனும் நடைபவணி இன்று இடம்பெற்றது.

பாடசாலையின் அதிபர் எம்.எல். பதியுத்தீன் தலைமையில் பாடசாலை முன்றலில் தொடங்கப்பட்ட நடைபவணி பிரதான வீதி வழியாக பிரதேசத்தின் எல்லைப் பகுதிக்குச் சென்று மீண்டும் உள்ளூர் வீதிகளின் ஊடாகப் பயணித்து அஷ்ரப் பொது விளையாட்டு மைதானத்தை அடைந்தது.

வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த நடைபவனியில் பிரதம அதிதியாக கொழும்பு சிறுவர் சீமாட்டி வைத்தியசாலையின் கதிரியக்க வைத்திய நிபுணரும் பாடசாலையின் பழைய மாணவருமான வைத்தியர் வை.உடைத்துல்லாஹ் கலந்துகொண்டார்.

கௌரவ அதிதியாக ஓய்வு பெற்ற ஆசிரியரும், முன்னாள் அல்–ஹாமியா அரபுக் கல்லூரியின் அதிபருமான அல்ஹாஜ். மௌலவி யூ.எல் ஏ. கபூர் (பலாஹி) கலந்து கொண்டார்.

நடைபவணியி பழைய மாணவர்கள், ஊர் பிரமுகர்கள், உலமாக்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், ஊடகவி–யலாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

## ரணிலோடு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேசிய ஆட்சி அமைக்கப்படவேண்டும் என்ற நிலைப்பாட்டில்தான் நாம் இருந்தோம். அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து நாட்டைக் கட்டியெழுப்பவேண்டும் என்ற நிலைப்பாட்டில் நாம் உறுதியாகவும் இருந்தோம்.

அந்தக் காரணத்தினாலேயே ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஜனாதிபதி பதவியை வழங்கினோம். தற்போது அவருடன் இணைந்து பணியாற்றுகின்றோம். அவ்வாறு நாட்டின் எதிர்காலத்தினை மையப்படுத்திச் செயற்படும் எம்மால், சஜித் பிரேமதாச தேசிய ஆட்சியில் இணைந்து கொண்டால் அவருடனும் பணியாற்ற முடியும் – என்றார்.

## இழப்பீடு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூழ்கியது. இந்தப் பேரிடர் காரணமாக ஏற்பட்ட இழப்புக்களுக்கான எந்தவிதமான இழப்பீடுகளும் இலங்கைக்கு இது–வரையில் வழங்கப்படவில்லை. அதேநேரம் இழப்பீட்டுத்தொகையைவழங்காதிருப்பதற்காக இலஞ்சம் வழங்கப்பட்டுள்ளதாக கிடைத்த தகவல்களை அடுத்து அது தொடர்பாக விசாரணை நடத்தும்படி பொலிஸ–ாரிடம் நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக் அறிவுறுத்தியுள்ளார்.

# காணாமற்போனோர் தொடர்பான அலுவலகம் தம்மை மிரட்டுவதாக உறவுகள் குற்றச்சாட்டு





(சண்முகம் தவசீலன்)

காணாமற்போனோர் தொடர்பான அரச அலுவலகம் (ஓ.எம்.பி), தாங்கள் அறிவித்து வரவில்லை என்றால் சட்ட நடவடிக்கை எடுப்போம் என்று தங்களை மிரட்டுவதாகக் காணாமற்போனோர் மற்றும் பலவந்தமாகக் காணமலாக்கப்பட்டோரின் உறவுகள்

குற்றஞ்சாட்டுகின்றனர்.

மூன்று தடைவ அறிவித்தும் எமது அலுவலகத்திற்கு மதிப்பு கொடுக்கவில்லை, நான்காவது தடவை அறிவித்தும் வரவில்லை என்றால் நாங்கள் சட்ட நடவடிக்கை எடுப்போம் என்று சொல்லி தாம் மிரட்டப்பட்டனர் என்று உறவினர்கள் தெரிவித்தனர்.

முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்க கட்டடத்தில் சனிக்கிழமை மாலை செய்தியாளர்களிடம் பேசிய உறவினர்கள் இதனைத் தெரிவித்தனர்.

முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல்ஆக்கப்பட்டவர்களின்உறவுகளின் சங்க தலைவி மரியசுரேஷ் .ஈஸ்வரி, செயலாளர் பிராபாகரன் றஞ்சனா, உப செயலாளர் சுப்பிரமணியம் .பரமானந்தம் இந்தச் சந்திப்பில் கருத்துக்களைப் பகிர்ந்துகொண்டனர்.

காணாமற்போனோர் தொடர்பான அலுவலகம் உருவாக்கப்பட்டதில் இருந்து இன்று வரைக்கும் எட்டு மாவட்ட சங்க தலைமையினாலும் உறுப்பினர்களாலும் நிராகரிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் அந்த அலுவலகம் வெள்ளிக்கிழமை கடிதம் அனுப்பியிருகின்றார்கள் பிள்ளைகளையும்கூட்டிக்கொண்டு வங்கிக் கணக்கு இலக்கமும் கொண்டுவரவேண்டும் என்று அறிவித்துள்ளார்கள்.

இந்த அலுவலத்தினர் எமது உறவுகளுக்காகக நட்டஈடுட்டைப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவுறுத்தி வருகின்றார்கள். தமிழ் மக்களை மிரட்டி அவர்கள் வேலை செய்யத் தேவையில்லை. அங்கு பணிய–ாற்றுபவர்களுக்கு அந்த அலுவலகத்தினால் நிறய

இலாபம் இருக்கின்றபடியால்தான் தொடர்ச்சியாக எங்களுக்கு அழுத்தம் கொடுக்கின்றார்கள். மூன்று தடைவ அறிவித்தும் அலுவலகத்திற்கு மதிப்பு கொடுக்கவில்லை நான்காவது தடவை அறிவித்து வரவில்லை என்றால் நாங்கள் சட்ட நடவடிக்கை எடுப்போம் என்று சொல்லியும் மிரட்டுகிறார்கள்.

அந்தச் சட்ட நவடிக்கை என்ன என்பதை எங்களுக்கு பகிரங்கமாக அவர்கள் சொல்லவேண்டும்.. எங்களை பயமுறுத்தி விவரத்தினை எடுக்க வேண்டும் என்றால் அவ்வாறன ஆட்சியும் தேவையில்லை அலுவலகமும் தேவையில்லை.நாங்கள் எங்கள் உயிர் இருக்கும் மட்டும் போராடுவோம்

2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவடைந்த மாதம் வந்துகொண்டிருக்கும்போது எங்களுக்கு இவ்வாறான மிரட்டல்களும் ஆபத்துக்களும் வருகின்றன. மே 18 இனம்படுகொலை நாள் நெருங்கிவரும் நேரம் ஒ.எம்.பி. அலுவலகத்தில் வேலை செய்பவர்கள் மாவட்டத்தைவிட்டு வெளியேறவேண்டும் என்று கோருகின்றோம். காணாமல் போனோரின் உறவுகளுக்கு சர்வதேச நீதிமன்றத்தில் நீதி வழங்க வேண்டும். அதுதான் எங்கள் ஒரே கோரிக்கை. இந்த நீதியினை வேறு எந்தச் சமரசங்களையும் ஏற்கமாட்டோம் – என்றார்கள். .

# திருகோணமலை மக்கள் எதிர்நோக்கும் காணிப்பிரச்சினைக்கு விரைவில் தீர்வு

## எம் எஸ் தௌபீக் எம்.பி தெரிவிப்பு

(எப்.முபாரக்)

திருகோணமலையில் மக்கள் காணிகளுக்கு துறைமுக அதிகார சபை உரிமைகோரும் விவகாரம் தொடர்பில் விரைவில் தீர்வு எட்டப்படும் என்று நாடாளு மன்ற உறுப்பினர் தௌபீக் தெரிவித்தார்.



குடாக்கரை மக்கள் எதிர் நோக்கும் காணிப்பிரச்சினை தொடர்பானகலந்துரையாடல் சீனக்குடா திமுத்துகம விகாரையில் இன்று இடம் பெற்றது. இந்தக் கூட்டத்தில் கருத்துத் தெரிவித்தபோதே நாடாளுமன்ற உறுப்பினர் இதனைத் தெரிவித்தார்.

சின்னம்பிள்ளைசேனை, கருமலையூற்று, வெள்ளை மணல், நாச்சிக்குடா, சீனன்குடா, கவாட்டிக்குடா, கப்பல்துறை, முத்துநகர், பாலையூத்து, மட்கோ போன்ற இடங்களில் காணப்படு கின்ற காணிகளை இலங்கைத் துறைமுக அதிகார சபை உரிமைகோரும் விடயம் தொடர்பாக இந்தச் சந்திப் பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

குடாக்கரை காணிப்பிரச்சினை மாத்திரமன்றி திருகோணமலை மாவட்டத்தில்காணப்படும்அனைத்துக் காணிப்பிரச்சினைகளையும் தீர்ப்பதற்கு தான் தொடர்ந்து முயற்ச்சித்துக்கொண்டிருக்கிறார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் அங்கு தெரிவித்தார். திருமலை மாவட்ட காணிப்பிரச்சினைகள் அனைத்தும் விரைவில் தீர்க்கப் படும் எனவும் தெரிவித்தார்.

இந்த கலந்துரையாடலில் சீனக்குடா விகாராதிபதி சங்கைக் குறிய அலுத்ஓயா சத்தாதிஸ்ஸ, திமுத்துகம விகாராதிபதி சங்கைக் குறிய சேருவில ஜயதிஸ்ஸ, முன் னாள் பிரதேச சபை உறுப்பினர் பஸீர் மற்றும் குடியிருப்பாளர்கள் பலர் கலந்துகொண்டனர்.



# சாவகச்சேரியில் கைக்குண்டு மீட்பு

சாவகச்சேரிசங்கத்தானைமீனாட்சி அம்மன் கோவில் பகுதியில் அமைந் துள்ள வைத்தியர் ஒருவரின் வீட்டில் இருந்து இன்று காலை கைக்குண்டு ஒன்றுகண்டெடுக்கப்பட்டுள்ளது.

வைத்தியர் வீட்டு வளவைச் சுத்தம்செய்து கொண்டிருந்த பொழுது கைக்குண்டைகண்டுள்ளார். அதனை எடுத்துச் சென்று சாவகச்சேரி தம்ப தோட்ட இராணுவ முகாமில் அதனை ஒப்படைத்துள்ளார்.

இது தொடர்பாக இராணுவத்தி னரால் சாவகச்சேரி பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து சம்பவ இடத்திற்குச் சென்ற பொலி ஸார் விசாரணை நடத்தினர்.

# கந்தளாயில் ஊருக்குள் புகுந்து காட்டு யானைகள் அட்டகாசம்

## வீடுகளை உடைத்து நெல்லை உறுஞ்சின









(எப்.முபாரக்)

திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பன்னிரெண்டாம் கட்டைப் பகுதியில் இன்று அதிகாலை நுழைந்த காட்டு யானைகள் வீடுகளை சேதப்படுத்தி யதுடன் அவற்றிலிருந்த நெல் மூடைகளை யும் தின்று தீர்த்துள்ளன.

கந்தளாய் பன்னிரண்டாம் கட்டைப் பகுதி யில் நாளாந்தம் யானைகளின் தொந்தரவு அதிகரித்திருப்பதாக அப் பகுதி மக்கள் முறையிடுகின்றனர்.

தினமும்காட்டுயானைகள்நெல்மூடைகளை இழுத்துச் சென்று சாப்பிடுவதாகவும், இரவு வேளைகளில் நடமாட முடியாத நிலையில் உள்ளதாகவும்அப்பகுதிமக்கள்தெரிவிக்கின்றனர்

காட்டுயானைகள்ஊருக்குள்நுழையாமல் பாதுகாப்புவேலிகள்அமைக்கப்பட்டுள்ளபோதிலும் யானைகள்அதனைப்பொருட்படுத்துவதில்லை என்றும் மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

காட்டு யானையினால் எமது வீடு சேதம டைந்துள்ளதால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்தி புனரமைத்து தருமாறு பாதிக்கப்பட்ட வீட்டு உரிமையாளர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# 24 மணி நேரத்திற்குள் 4 டிப்பர்கள் மாட்டின





கிளிநொச்சி பொலிஸார் மற்றும் சிறப்பு அதிரடிப்படையினர் இணைந்து மேற்கொண்ட நடவடிக்கையில் 24 மணி நேரத்திற்குள் நான்கு டிப்பர்கள் கைப்பற்றப்பட்டன. அவற்றின் சாரதி களும் கைது செய்யப்பட்டனர்.

பூநகரி பகுதியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்று கொண்டிருந்த பயணித்த டிப்பர் வாகனம் ஒன்றை வீதி சோதனையின் போது பொலிஸார் கைப்பற்றினர். ம ணலினால் மறைத்து ஒரு தொகை முதிரை மரக்குற்றிகளை யாழ்ப்பா ணத்திற்கு அந்த டிப்பர் கடத்தியது கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து சனிக்கிழமை அது கைது செய்-யப்பட்டது. அதன் சாரதி கைது செய்யப்பட்டார். அன்றைய தினமே பரந்தன் பகுதியில் இருந்து அனுமதி பத்திரத்திற்கு முரணாக மணல் ஏற்றி பயணித்த டிப்பர் வாகனம் ஒன்றும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

அத்துடன் ஏ-9 பிரதான வீதியில் ஒரே இலக்கத்தகட்டினை கொண்ட இரண்டு டிப்பர் வாகனங்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன. கைப்பற்றப்பட்ட டிப்பர்களை நீதிம ன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் சந்தேகநபர் கள் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள னர் எனவும் கிளிநொச்சி பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

# அறிவிப்பு இன்றி அடிக்கடி நீர் வெட்டு சாய்ந்தமருது மக்கள் அசௌகரியம்




(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

சாய்ந்தமருதில் எந்த முன்னறிவித்த லும் இன்றி, அடிக்கடி நீர் வெட்டு இடம் பெறுவதாக பிரதேச மக்கள் விசனம் தெரிவித்தனர்.

இதனால் புனித நோன்பு கால மான ரமழானில் மிகுந்த இன்னல்களை அனுபவிப்பதோடு, உரிய நேரத்தில் செய்ய வேண்டிய கடமைகளைக்கூடச் சரியான நேரத்தில் நிறைவேற்ற முடியாத துன்பத்தை அனுவித்ததாகவும் மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

‘‘கால நேரம் இன்றி, எந்தவித முன்னறிவிப்பும் இன்றி, கேட்கப் பார்க்க ஆள் இல்லாதது போல் ஒவ்வொரு நாளும் ஒரு நாளுக்கு இரண்டு அல்லது மூன்று தடவைகளுக்கு மேல் நீர் வெட்டினை மேற்கொள்கின்றனர்.

இப்பிரதேசத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண, மாநகர சபை முன்னாள் உறுப்பினர்கள் இருந்தும் இவ்விடயத்துக்கு தீர்வைப் பெற்றுத் தர முடியாது பாராமுகமாக இருக்கின்றனர்” என்றுபிரதேசமக்கள்கருத்துதெரிவித்தனர்.

# மூன்று வானங்கள் மோதிய விபத்தில் இருவர் காயம்





வவுனியாவில் மூன்று வாகனங்கள் மோதிய விபத்தில்: மாணவன் உள்ளிட்ட இருவர் படுகாயமடைந்தனர். வவுனியா, வேப்பங்குளம் பகுதியில் இருந்து மன்னார் வீதி வழியாக துவிச்சக்கர வண்டியில் சென்ற மாணவன் யாழ் ஐஸ்கிறீம் கடை வீதியில் தி ரும்ப முற்பட்டபோது அதே திசையில் வந்த பட்டா ரக வாகனம் சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து மாணவனை மோதியதுடன் எதிர்த் திசையில் வந்த மோட்டர் சைக்கிளுடனும் மோதி விபத்துக்குள்ளானது. இந்த விபத்து இன்று காலை இடம்பெற்றது.

விபத்தில் மாணவன் மற்றும் மோட்டர் சைக்கிள் சாரதி ஆகிய இருவரும் பயடுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். மாணவன் அதி தீவிர சிகிச்சைப் பிரிவிற்கு மாற்றப்பட்டார். (100)

நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com இணையம் - onlinekathir.com

## பல கோணங்களில் விசாரணை அவசியம்

நெடுந்தீவில் 70 வயதுக்கு மேற்பட்ட ஐவர் படுகொலை செய்யப்பட்டுள்ளதுடன் 100 வயது மூதாட்டியைப் படுகொலை செய்ய முயற்சித்தும் இருப்பது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. உயிரிழந்தவர்களில் ஒருவரான மூதாட்டியின் வீட்டில் வந்து தங்கியிருந்த ஒருவரே இந்தக் கொலைகளைச் செய்திருக்கிறார் என்கிற சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டிருக்கின்றார் என்பது மேலும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கின்றது.

கைதுசெய்யப்பட்ட நபர் ஏற்கனவே ஜெர்மனியில் கொலை முயற்சியில் ஈடுபட்டார் என்கிற வழக்கில் குற்றவாளியாகக் காணப்பட்டு அதற்காகவே நாடு கடத்தப்பட்டவர் என்பதும் அவர் மீண்டும் ஜெர்மனிக்குச் செல்வதற்கான பணத்தைப் பெறுவதற்காகவே மூத்தவர்களைக் கொலை செய்து அவர்களிடமிருந்த நகைகள் மற்றும் அலைபேசிகளைக் கொள்ளையிட்டார் என்பதும் காவல்துறையினரின் தகவல்களில் இருந்து தெரியவந்திருக்கிறது.

கொலை குறித்த தகவல்கள் வெளியானதுமே கொலை நடந்த வீட்டில் கடந்த சில நாள்களாகத் தங்கியிருந்த மற்றொரு ஆண் என்னவானார் என்பது தொடர்பில் பொதுமக்கள் வழங்கிய தகவல்களின் அடிப்படையில் காவல்துறையினர் துரிதமாக விசாரணைகளை நடத்தி சந்தேகநபரைக் கைது செய்திருக்கிறார்கள்.

கொலை நிகழ்ந்த வீட்டில் இருந்த மூதாட்டி தனது வருமானத்திற்காக தனது வீட்டை ஓர் விருந்தினர் விடுதி மாதிரி நடத்தி வந்திருக்கிறார். நெடுந்தீவுக்குச் சுற்றுலா வருவோருக்கு தங்குமிட வசதிகளையும் உணவு உள்ளிட்ட வசதிகளையும் வழங்கி வந்திருக்கிறார். அப்படித்தான் சந்தேகநபரும் அந்த மூதாட்டியின் வீட்டில் தங்கியிருந்துள்ளார். அங்கு வந்த ஏனையவர்கள் நகைகளை அணிந்திருப்பதைப் பார்த்தபோதே அவருக்கு அவற்றை அபகரிக்கத் தோன்றியிருக்கிறது.

அதுவும் கடற்படையினரின் முகாமுக்கு மிக அருகில் அமைந்திருக்கும் வீட்டில் கொலையாளி துணிச்சலாக அனைவரையும் வெட்டிக்கொல்லும் முடிவை எடுத்திருக்கிறார் என்பது இன்னும் அதிர்ச்சியை ஏற்படுத்துகின்றது. மனிதர்கள் எப்போது எப்படி மாறுவார்கள் என்பதையும் அவர்கள் தமக்குள் உள்ள மிருகக் குணத்தை எப்போது வெளிப்படுத்துவார்கள் என்பதையும் கண்டறிவது துர்பலமே என்பது இதன் மூலம் வெளிப்படுகின்றது.

எப்போதும் எவருடனும் எச்சரிக்கையாக இருப்பதே பாதுகாப்பானது என்பதுதான் இதுபோன்ற சம்பவங்களில் இருந்து ஒவ்வொருவரையும் தொலைவில் நிறுத்தி வைப்பதற்கான சாத்தியங்களை வழங்கும். இந்தக் காலத்தில் யாரையும் நம்பிவிடமுடியாது என்பதுதான் இதிலிருந்து கிடைக்கும் படிப்பினை.

இந்தக் கொலைகைள் தொடர்பில் சந்தேகநபரைக் கைது செய்வதற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்த காவல்துறையினர் பாராட்டுக்குரியவர்கள். அதேநேரம் இந்தக் கொலைகளுக்குப் பின்னால் நகைகளைக் கொள்ளையடிக்கும் நோக்கம் மட்டும்தான் இருந்ததா என்பதையும் அவர்கள் தீர விசாரித்து வெளிக்கொணர வேண்டும். சந்தேகநபர்களும் நகைகளும் கிடைத்துவிட்டதால் இந்த வழக்கை முடித்துவிட முடியும் என்கிற போக்கில் செயற்படாமல், இந்தக் கொலைகளுக்கு வேறு காரணங்களும் இருக்கின்றனவா என்பது தொடர்பிலும் தீவிரமாக ஆராயப்படுவது அவசியம்.

ஏற்கனவே அலைதீவில் வந்திருந்த கனடா நாட்டுத் தம்பதியர் மீது கூலிப் படையினரை வைத்துத் தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதாகச் செய்திகள் வெளியாகி இருக்கின்றன. கனடாவில் இருந்த பகையை இங்குள்ள கூலிப்படையினரை வைத்துத் தீர்த்துக்கொள்வதற்கு எடுக்கப்பட்ட முயற்சி அது என்று காவல்றதுயைனரின் விசாரணையில் தெரியவந்திருந்தது. அது போன்ற பின்னணிகளும் இந்தக் கொலைகளின் பின்னால் உள்ளனவா என்பது ஆராயப்படவேண்டும்.

புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் தாயகம் வந்து செல்லும் காலப் பகுதி இது. இந்த நிலையில் அப்படி வருபவர்கள் இலக்கு வைக்கப்பட்டுத் தாக்கப்படுவதும் கொலை செய்யப்படுவதும் திட்டமிட்டே நிகழ்த்தப்படும் ஒன்றா என்பது குறித்தும் ஆராயப்படவேண்டியிருக்கிறது. அப்படி நிகழந்தால் அதன் பின்னணியில் இருப்பவர்கள் யார் என்பதும் தீவிரமாக ஆராயப்படவேண்டும்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் யாருடைய தேவைக்காக நிகழ்த்தப்பட்டன என்ற சந்தேகங்கள் எழுப்பப்படுவதுபோன்று புலம்பெயர்ந்தவர்களை இலக்குவைக்கும் இதுபோன்ற தாக்குதல்களும் யாருடைய தேவைக்காகவாவது நிகழ்த்தப்படுகின்றனவா என்பது குறித்தும் தீர விசாரிக்கப்படுவது அவசியம்.

# ஆயுதமற்ற போராட்டத்துக்குள் மக்கள் வாழ்ந்து வருகின்றனர்

## உலக மீனவர்கள் அமைப்பின் செயலாளர் கேமன்குமார் கருத்து

ஆயுதமற்ற போராட்டத்துக்குள் மக்கள் வாழ்ந்து வருகின்றார்கள். அரசாங்கமே வளங்களை விற்கின்ற நடவடிக்கையிலும் குத்தகைக்கு வளங்களை வழங்கும் நடவடிக்கையிலும் ஈடுபட்டு வருகின்றது. மக்கள் தான் தங்கள் பிரச்சினைகளை வெளிப்படுத்துவதற்கு ஒன்றிணைந்து செயற்படவேண்டும் என உலக மீனவர்கள் அமைப்பின் பொதுச் செயலாளரும் தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் தேசிய அமைப்பாளருமான கேமன்குமார் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

வாழ்வாதாரத்தைக் கொண்டு நடத்துவதற்கு போராட வேண்டியவர்களாக இருக்கின்ற நிலையில் இந்த நாட்டின் வளங்களை சுரண்டுகின்ற நடவடிக்கைகள் இடம்பெற்று வருகிறது. ஜனநாயக நாடு என்று கூறினாலும் கரையோர நிலங்களஈ விவசாய நிலங்கள் களப்பு மற்றும் மக்கள் பாரம்பரியமாக வாழ்ந்து வரும் நிலங்கள் கூட அபகரிக்கப்படுகின்ற இல்லாமல் ஆக்கப்படுகின்ற நிலை ஏற்பட்டு வருகிறது. அபிவிருத்தி என்ற போர்வைக்குள் இத்தகைய பல வேலை திட்டங்கள் இடம்பெற்று வருகிறது.

பொருளாதார வளர்ச்சியை காரணம் காட்டி நாட்டில் வளங்கள் விற்பனை செய்யப்படுவதும் குத்தகைக்கு விடுதல் போன்றவற்றால் பல்தேசிய கம்பனிகளின் தாக்கம் அதிகரித்து வருகிறது.

இத்தகைய திட்டங்களை மக்களுக்கு காட்டுகின்றார்கள். இவ்வாறு நாம் செய்யாவிட்டால் நாம் ஒன்றும் செய்ய முடியாது என்றும், இதனால்தான் நாம் முன்னேறி வருகின்றோம் எனக் கூறி வருகின்றார்கள். ஆனால் இது உண்மை நிலை அல்ல குறிப்பாக இன்று மின்சார கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்த மின்சாரக் கட்டணத்தை ஒரு மாதம் கட்டாது விட்டால் உடனே துண் டித்து விடுகின்றார் கள். அதனைச் செய்கிறோம் இதனைச் செய்கின்றோம் என்று கூறுபவர்கள் எதற்காக இந்த மின் வெட்டை ஏற்படுத்துகின்றார்கள். இது மட்டுமன்றி சிலநிறுவனங்களை குத்தகைக்கு விடவேண்டும் எனக் கூறுகின்றார்கள். இவ்வாறான விடயங்ளை மக்கள் கேள்வி கேட்டுவிடுவார்கள் என்பதைத் தடுப்பதற்காக பயங்கரவாத தடைச் சட்டத்தை புதிதாக கொண்டுவருகின்றார்கள். மக்கள் கிளர்ந்து கேள்வி கேட்டாலும் அதனை அடக்கத் தான் இத்தகைய நடவடிக்கைகளை ஏற்படுத்துகின்றார்கள். மக்களை அச்சுறுத்தி அடக்கி வைப்பற்காகத் தான் இந்த நிலை. இதேபோன்று இந்திய மீனவர்களின் அத்துமீறிய நடவடிக்கைகள் தொடர்பிலும் உரிய நடவடிக்கை எடுக்காது பேச்சுவார்த்தை என்ற போர்வையில் இழுத்தடிப்புச் செய்கின்றார்கள்.



வடக்கில் இந்தியமீனவர்களின் அத்துமீறல்கள் இருந்தால் தெற்கு மீனவர்கள் அது தமக் குப் பிரச்சினை இல்லை என்று நினைக்கின்றார்கள். அதேபோன்று தெற்கில் இந்திய மீனவர்கள் பிரச்சினை என்றால் வடக்கு மீனவர்கள் தமக்குப் பிரச்சினை இல்லை என்று நினைக்கின்றார்கள். ஆனால் எங்கோ ஒரு இடத்தில் ஆக்கிரமிப்பு நடக்கும் போது அனைத்து இடங்களுமே பிரச்சினைகள் ஏற்படும். ஆகவே ஆயுதமற்ற ஒரு போராட்டத்தில் தான் நாங்கள் வாழ்ந்துவருகின்றோம். மக்கள் என்னதான் இருந்தாலும் தங்கள் பிரச்சினைகள் தொடர்பில் தெளிவாக வெளிப்படுத்துகின்ற வகையில் ஒன்றுபட்டுச் செயற்படவேண்டும். –என்றார்.

# தமிழ், சிங்கள மொழிகளில் அரச நிறுவனங்களில் எந்தவொரு குடிமகனும் சேவைகளைக் கோரலாம்

எந்தவொரு குடிமகனும் தமிழ் அல்லது சிங்கள மொழிகளில் அரசாங்க நிறுவனங்களில் இருந்து சேவைகளை பெற்றுக்கொள்ள முடியும் என்று பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் மேலதிக செயலாளர் அனுராதா விஜேகோன் தெரிவித்துள்ளார்.

சிங்களம்மற்றும்தமிழ் ஆகிய இரண்டு மொழிகளும் அரசமைப்பில் அரச கரும மொழிகளாக அறிவிக்கப்பட்டுள்ளன.

மேலும் ஒரு குடிமகன் இந்த நாட்டில் உள்ள அரசாங்க நிறுவனத்தில் சேவையைப் பெறும்போது, நபர் ஒருவர் தனக்குத் தேவையான சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு சிங்களம் அல்லது தமிழ் மொழிகளில் கோரலாம்.

அந்த உரிமை அரசமைப்பில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரச கரும மொழிக்கொள்கையை அமுல்படுத்துவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பில் அரசாங்க தகவல்திணைக்களத்தில் நடைபெற்றவிசேட செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரண்டும் தேசிய மொழிகளாகக் கருதப்படுவதாகவும், ஒரு நாடு என்ற வகையில் அரச துறையில் மட்டுமன்றி வேறு எந்தப் பணியிலும் சிங்களம் மற்றும் தமிழ் இரண்டும் பிரதான மொழிகளாகும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

பொதுநிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் கீழ் அரச கரும மொழிப் பாடத்தைக் கையாள்வதற்கான தனியான பிரிவு ஒன்று இருப்பதாகவும், நாட்டின் அரச கரும மொழிக் கொள்கையை அரசமைப்பில் உள்ளடக்கி அதற்கு அதி முக்கியத்துவம் வழங்குவதற்கு அரசமைப்பிலேயே ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# பல்பொருள் அங்காடியில் ஒருவரை கடுமையாகத் தாக்கிய ஊழியர்கள்

## நடவடிக்கை எடுக்கப்படும் என நிறுவனம் அறிவிப்பு

பல்பொருள் அங்காடியொன்றில் திருட முயன்றவரை அதன் ஊழியர்கள் மோசமாக தாக்கும் வீடியோ சமூக ஊடகங்களில் வெளியாகி கடும் சீற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

வத்தளையில் உள்ள பல்பொருள் அங்காடியில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது நபர் ஒருவரை ஊழியர்கள் சூழ்ந்து நின்று தாக்குவதை வீடியோ காண்பிக்கின்றது. இது தொடர்பாக அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள நிறுவனம் 19 ஆம் திகதி இந்த சம்பவம் இடம்பெற்றதாகத் தெரிவித்துள்ளது.

திருடமுயன்றவர் தப்பியோடமுயன்றார் ஆனால்வாடிக்கையாளர்களும் ஊழியர்களும் அவர் தப்பியோடாமல் தடுத்தனர்.

அதன் பின்னர் பதற்றமான நிலை உருவானது எனத் தெரிவித்துள்ள நிறுவனம் சட்ட அமுலாக்கல் அதிகாரிகள் வரும் வரை குற்றத்தில் ஈடுபட முயன்றவருக்கு காயங்கள் எதுவும் ஏற்படாமல் பாதுகாத்துக்கொள்வதே உரிய நடைமுறை. ஆனால், இந்த நடைமுறை பின்பற்றப்படவில்லை இதில் சம்பந்தப்பட்டவர்கள் விடயத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

# யாழில் மாடுகளைத் திருடி இறைச்சியாக்கி விற்பனைசெய்த கும்பலின் முக்கியநபர் கைது

யாழ். மாவட்டத்தில் பல பகுதிகளில் மாடுகளை களவாடி இறைச்சியாக்கி விற்பனை செய்த கும்பலின் முக்கிய நபர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று தெல்லிப்பழை பொலிஸார் தெரிவித்தனர்.

திருட்டுக்கும்பலிடம் இறைச்சியை வாங்கி விற்பனை செய்தவரும் கைது செய்யப்பட்டுள்ளார் என்று கூறிய பொலிஸார், மேலும் நால்வர் தேடப்படுவதாகக் குறிப்பிட்டனர்.

வடமராட்சி துன்னாலையைச் சேர்ந்த 24, 26 வயதுடைய இருவரே கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் மாநகர், வட்டுக்கோட்டை, அளவெட்டி, தெல்லிப்பழை, வடமராட்சி உள்ளிட்ட பிரதேசங்களில் 25 இற்கும் மேற்பட்ட மாடுகளைத் திருடு இறைச்சியாக்கி விற்பனை செய்துள்ளனர் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

5 பேர் கொண்ட கும்பல், பகலில் மோட்டார் சைக்கிளில் சென்று மாடுகளை நோட்டமிட்டு வந்து இரவில் வாகனத்தில் சென்று இரும்புச் சங்கிலி போட்டு மாடுகளை ஏற்றி வந்து கப்பூது வெளியில் வைத்து இறைச்சியாக்கி விற்பனை செய்துள்ளது.

இறைச்சியடிக்கப்பட்ட மாடுகளின் எச்சங்கள் பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளன.

திருட்டுக்குப் பயன்படுத்தப் பட்ட வாகனம், இரும்புச் சங்கிலி மற்றும் வாள் ஒன்றும் முதன்மைச் சந்தேக நபரிடம் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் கூறினர்.

சந்தேக நபருக்கு எதிராக பருத்தித்துறை நீதிமன்றில் வழக்குகள் உள்ளன என்றும் பொலிஸார் கூறினர்.

# 25 நிர்வாக மாவட்டங்களிலும் பாதுகாப்பு பணிகளில் முப்படை

பொது மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காகவும், அமைதியைப் பேணுவதற்காகவும் 25 நிர்வாக மாவட்டங்களிலும் முப்படையினரை பாதுகாப்பு பணிகளில் நிலைநிறுத்துவதற்கான வர்த்தமானி அறிவித்தல் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் வெளியிடப்பட்டுள்ளது.

பொது மக்கள் பாதுகாப்பு கட்டளை சட்டத்தின் 12 ஆம் பிரிவினால் ஜனாதிபதிக்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய வெளியிடப்பட்டுள்ள இந்த வர்த்தமானி அறிவித்தல் சனிக்கிழமை முதல் அமுலாகும் என்று தெரிவிக்கப்பட் டுள்ளது.

அதற்கமைய தரைப்படை, கடற்படை மற்றும் வான்படை என்பன கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி, மாத்தளை நுவரெலியா காலி மாத்தறை அம்பாந்தோட்டை, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, குருணாகல், புத்தளம் , அநுராதபுரம், பொலன்னறுவை, பதுளை, மொனராகலை, இரத்தினபுரி மற்றும் கேகாலை ஆகிய மாவட்டங்களில் பணிக்கமர்த் தப்பட்டுள்ளதாக வர்த்தமானி அறிவித் தலில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது.